# உன்னை நான் சந்தித்தேன்



## 1

"சம்ருதா, அதோ உன் அம்மா வருகிறார்கள், பார்!" என்று அவள் நடத்தி வரும் நர்சரிப் பள்ளியின் கடைசிக் குழந்தையை, அவளுடைய தாயிடம் ஒப்படைப்பதற்காக, வகுப்பறையில் இருந்து, தரங்கிணி வெளியே கூட்டி வந்தாள்.

"என்னங்க, சம்ருச் செல்லம் தொல்லை பண்ணாமல் சமத்தாக இருந்தாளா?" என்று புன்னகையோடு கேட்டபடி, தரங்கிணியின் கையில் இருந்த புத்தகப் பையையும் சிற்றுண்டி, தண்ணீர்க் கூடையையும் வாங்கிக் கொண்டாள், இரண்டரை வயது சம்ருதாவுடைய தாயார்.

எல்லா அன்னையரையும் போலவே, அவளும் நின்று பேச விரும்புவதைத் தரங்கிணியால் ஊகிக்க முடிந்தது! ஆனால், அதில் இரண்டு பிரச்சினைகள்!

This memorandum contains advisory, consultative and deliberative material and is intended only for the person(s) named as recipient(s).

அந்தப் பெண்மணி, உண்டு பசியாறி, தன் வேலைகளை முடித்துவிட்டு வந்திருப்பாள். ஆனால், தரங்கிணிக்கு இனிமேல்தான் எல்லாம்!

அடுத்தது, தரங்கிணி, தன் வருமானத்தைப் பெருக்கிக் கொள்வதற்காகச் செய்யும் அடுத்த வேலை! நர்சரிப் பள்ளி வருமானம், இரண்டு உதவியாளர்களுக்குச் சம்பளம், இடப் பராமரிப்பு போக, அதிகம் மிஞ்சுவது இல்லை! எனவே, அவளது சுதந்திர மனப்பான்மைக்கு ஒத்திருந்ததோடு, கைத்திறனும், ஆர்வமும் கூட இருந்தால், சித்திரங்களைத் தீட்டி, விற்பதிலும் பணம் ஈட்டிக் கொண்டிருந்தாள். அது கொஞ்சம் முழு மனதையும் ஈடுபடுத்திச் செய்ய வேண்டிய ஒன்று! குழாயைத் திறந்தால் தண்ணீர் கொட்டுகிற மாதிரி, நினைத்ததும், செய்யக் கூடியதல்ல! அதற்கு, அவளுக்கு நேரம் தேவை!

இதையெல்லாம் சொல்லி, விளக்கிக் கொண்டிருக்க முடியாது என்பதால், "சம்ருதா கெட்டிக்காரப் பெண். இன்றைக்குக் கற்றுக் கொடுத்த கதையை, அவள் உங்களுக்குச் சொல்லப் போவதாகச் சொன்னாள். அவள் மறக்கும்முன், வீட்டுக்கு அழைத்துப் போய், அதைக் கேட்டுவிடுங்கள். உடனே திருப்பிச் சொல்வது, அவளது ஞாபக சக்தியை அதிகரிக்கச் செய்யும்!" என்று கூறவும், மகளை அழைத்துக் கொண்டு, உடனே கிளம்பி விட்டாள் அந்தத் தாய்!

ஏற்கெனவே வேலை முடித்திருந்த உதவியாட்கள் இருவரையும் அனுப்பிவிட்டுப் பள்ளிக் கதவை மூடும் போது தான், கேட்டை ஒட்டி நின்ற காரை தரங்கிணி கவனித்தாள்!

வீட்டோரமாகச் சாலையை ஒட்டி இருந்த மர நிழலில் அவளுடைய தந்தை மகேசுவரனின் கார் நின்றிருந்தது!



அவர் எங்கே, இங்கே வந்தார்?

இந்த வீடு, தரங்கிணியுடைய தாய் வழிப்பாட்டியின் வீடு.

வீட்டின் உள்ளே வந்தால், மாமியாரைப் பார்த்துப் பேச நேரும்! மறைந்துவிட்ட மகளின் நினைவில், லேசாகக் குற்றம் சாட்டும் தொனியில், தங்கம்மா பேசுவதைக் கேட்க நேரும்! அது, அவருக்குப் பிடிக்காது!

தங்கம்மாவின் தொனியின் பின்னே உண்மை இருந்ததாலேயே, மகேசுவரனால், அதைத் தாங்க முடிவது இல்லை என்பது, தரங்கிணியின் கருத்து!

'கருணா எலக்ட்ரானிக்ஸ்' நிறுவனத்தை உருவாக்கியவருடைய மனைவி என்ற முறையிலும், அதில் பல பங்குகளை வைத்திருந்ததாலும் மாமியாருக்கு ஒரு பெரும் தொகையை அனுப்பிவைப்பதோடு, அந்த வீட்டுடன் தன் தொடர்பை நிறுத்திக் கொண்டிருந்தார், அவர்!

தாய் வழிப் பாட்டியிடம் பரிவும் பிரியமும் கொண்டிருந்த தரங்கிணி, மாதம் ஒரு தடவையேனும் பாட்டியைப் பார்க்க வந்து, இரண்டு நாட்கள் அங்கே தங்கிவிட்டுப் போவது வழக்கமே! தந்தையோடு கருத்து வேறுபாடு கொண்ட போது, வசிப்பதற்கும் பாட்டி வீட்டுக்குத்தான் வந்தாள்!

அதன்பிறகு, மகேசுவரன் மகளையும் அதிகம் சந்தித்தது இல்லை எனலாம்!

ஆனால், அவ்வப்போது டெலிபோனில், மகளோடு பேசி, நலம் விசாரித்துக் கொள்வார்!

அதுகூட, அவருடைய பி.ஏ. நினைவு படுத்தித்தானோ, என்ற ஐயம் தரங்கிணிக்கு உண்டு! மற்றபடி, வீட்டிலேயே

This memorandum contains advisory, consultative and deliberative material and is intended only for the person(s) named as recipient(s).

மக்களோடு உரையாட எண்ணாதவர், அலுவலகம் சென்று டெலிபோனில் எப்படிப் பேசுவார்?

பேசக் கூடாது என்பது கிடையாது! ஆனால், அதுபோன்ற சிறுசிறு அன்புச் செய்கைகள் செய்து, அவருக்குப் பழக்கம் இல்லை! 'கருணா' நிறுவனத்தின் சேர்மன் என்ற நிலையில் இருந்து, இறங்கி வந்து பழக, வீட்டிலும்கூட, அவருக்கு முடிந்தது இல்லை!

அப்படிப்பட்டவர் இப்போது, கேட்டுக்கு வெளியே காத்திருப்பது என்றால், மகளுக்குக் கொஞ்சம் கஷ்டமாகக் கூட இருந்தது எனலாம்.

புரியாத சிறு திகைப்புடன் தரங்கிணி வெளிப்புறம் நோக்கி நடக்கும்போதே, காரின் கதவு திறந்து, காரோட்டி ஓடி வந்தான்.

"அய்யா, காரிலே, சின்னம்மா!"

தலையசைத்து, "உன் மனைவி குழந்தை பெற்று, வந்து விட்டாளா, ரங்கா?" என்று தரங்கிணி கேட்கவும், அவனுக்கு வாயெல்லாம் பல்லாயிற்று! சந்தோஷமாகத் தலையாட்டி, "ஆம்பளைப் பிள்ளைங்கம்மா!" என்றான் அவன்.

அதற்குள் காரை நெருங்கிவிட, ரங்கன் ஓடிப்போய்க் கார்க் கதவைத் திறந்தான்.

"காரில் ஏறிக் கொள் உன்னோடு கொஞ்சம் பேச வேண்டும்!" என்றார் மகேசுவரன்.

அவள் சற்றுத் தயங்கவும், "ஏன் உன் பாட்டியிடம் சொல்ல வேண்டுமா? பெற்ற தகப்பனிடம் பத்து பதினைந்து நிமிஷங்கள் பேசுவதற்குக்கூட, அவர்களிடம் அனுமதி பெற வேண்டுமா?" என்று எரிச்சலோடு சிடுசிடுத்தார், பெற்றவர்!



மகேசுவரனுக்கு நினைத்தது நடக்க வேண்டும்தான். ஆனால், சட்டென்று பொறுமையிழந்தது, அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது!

அவரது முகத்தில் தெரிந்த களைப்பும்தான்!

"இல்லைப்பா! பாட்டி, சாப்பிட்டுவிட்டுத் தூங்கப் போயிருப்பார்கள். நாலு மணிக்குமுன் வெளியே வரமாட்டார்கள்... சரி... சொல்லுங்கள்!" என்று காரில் ஏறி, அவர் அருகே அமர்ந்தாள் அவள்.

காரோட்டியைக் கூப்பிட்டு, பைக்குள் கையை விட்டு, ஓர் ஐம்பது ரூபாய்த் தாளை எடுத்து, அவனிடம் கொடுத்தார், மகேசுவரன், "எங்காவது போ, எதையாவது சாப்பிட்டு விட்டு, ஒரு பதினைந்து நிமிஷத்தில் திரும்பி வா!" என்று அவனை அனுப்பி வைத்தார்!

அவன் சென்றதும், "உன் தங்கைக்கு மூளை பிரண்டு விட்டது!" என்றார் அவர்!

தரங்கிணிக்கு ஆச்சரியமாக இருந்தது!

தீபிகா, மகேசுவரனுடைய செல்லப் பெண்! அதாவது, அவரால் செல்லம் என்று காட்ட முடியுமானால், அது முழுவதும் அவளுக்குத்தான் கிடைத்திருக்கிறது எனலாம்.

கைச்செலவுக்குப் பெரிய தொகை, நிறுவனத்தில் பங்குகள், ஒரு கார்!

மகேசுவரனுடைய மூன்று பிள்ளைகளுக்குமே, ஆறு ஆண்டுகளாக, அன்னி மாலாவும் சேர, நாலு பேருக்குமே இளையாவும் உண்டு என்றாலும், தந்தை கொடுத்த பணம் முழுவதையும், தரங்கிணி ஒரு போதுமே செலவு செய்து முடித்தது இல்லை!

This memorandum contains advisory, consultative and deliberative material and is intended only for the person(s) named as recipient(s).

ஆனால், தீபிகாவுக்கு இருபதாம் தேதியே, கையில் பணம் இராது! அப்பாவிடம் கெஞ்சிக் கொஞ்சி, இன்னும் கொஞ்சம் வாங்கிக் கொள்ளுவாள். அதுபோகவும், அவள் கேட்ட பொருட்கள், பெரும்பாலும், அவளுக்குக் கிடைத்திருக்கின்றன! கண்ணில் பட்ட ஆடையை வாங்குவாள். அவளது அறைக்குத் தனியாகப் பெரிய டீவி, பெரிய மியூசிக் சிஸ்டம், காருக்கு நினைத்தால் வண்ணம் மாற்றுவது, ஆறு சிடி மாற்றுகிற கார் ஆடியோ என்று, அவளுக்குச் செலவு நிறைய இருக்கும்!

இவற்றுள் டீவியும், மியூசிக் சிஸ்டமும், தந்தை சொன்ன மாப்பிள்ளையை மணந்து கொள்ளச் சம்மதித்ததற்காகக் கிடைத்தவை!

இந்த மாதிரி, அவர் சொன்ன பையனை நிராகரித்ததும், அவரது தொடர்ந்த வற்புறுத்தலும்தான், தரங்கிணி, தந்தையின் வீட்டை விட்டே வெளியேறக் காரணம்.

பிறகும், அருமையான பையன் கிடைத்திருக்கிறான். உன் பிடிவாதத்தால், தங்கைக்கும் அவனைப் பார்க்க முடியவில்லை. அதனால் இப்போதேனும் கல்யாணம் பண்ணிக் கொள் என்று தொடங்கினார்.

'எனக்கு இப்போதைக்குத் திருமணம் இல்லை, தங்கைக்கே செய்யுங்கள்' என்று தரங்கிணி பிடிவாதமாக முடித்து விட்டாள்.

மகேசுவரனுக்குக் கோபம்தான்! ஆனால், பங்குச் சந்தையில் கொடி கட்டிப் பறந்த சுகந்தன் குடும்பத்தை விட அவருக்கு மனமில்லை!



தற்செயல் போலத் தோன்றும்படி, தீபிகாவைக் கூட்டிப் போய்க் காட்ட, அந்தக் குடும்பத்துக்கும், அவளை மிகவும் பிடித்துப் போயிற்று!

முக்கியமாக சுகந்தனுக்கு!

சுகந்தனும், அவனது பெரிய காரும், தீபிகாவுக்கும் பிடித்துப் போய்விட, இவனுக்கு இவள் என்று, பெரியோர், சிறியோர் எல்லோர் அளவிலும் உறுதி செய்யப்பட்ட நிலை ஆயிற்று.

ஸ்டேட்சில் இருக்கும் மூத்த மகளின் வருகைக்காகத் திருமணத்தை ஆறு மாதம் பொறுத்து நடத்தும்படி, சுகந்தனுடைய பெற்றோர் கேட்டிருந்தனர்.

மகேசுவரனுக்கு ஆட்சேபம் எதுவும் இல்லை! அவரைப் பொறுத்த வரையில், சுகந்தன் மருமகனாக வரவேண்டும் என்று அவர் விரும்பியது உறுதிப்பட்டுவிட்டது! அந்தத் திருமணம், இன்னும் நாலே நாட்களில் என்றாலும் சரிதான், நாலாறு மாதங்களில் என்றாலும் ஒன்றுதான்! சுகந்தனுடைய தந்தை தில்லைநாயகம் வாக்கு சுத்தம் உள்ளவர்!

தீபிகாவுக்கும், கிட்டத்தட்ட திருமணம் நிச்சயம் ஆன பெண் என்கிற நிலை பிடித்திருந்தது! மணவிழா ஒரு சில மாதங்கள் தள்ளிப் போவது பற்றி, அவள் கவலைப்படவில்லை! "அதுவரை துணிமணிக்கென்று, அப்பாவிடம் நிறையக் கறக்கலாமே!" என்று தரங்கிணியிடம் சந்தோஷமாகச் சொன்னாள்!

அதேபோலக் கடைகளுக்குப் போவதும், அணிந்து பார்ப்பதும், வாங்குவதுமாக, அவ்வப்போது சுகந்தனோடு சுற்றுவதுமாக, ஆனந்தமாகவே இருந்தாள்!

This memorandum contains advisory, consultative and deliberative material and is intended only for the person(s) named as recipient(s).

இந்த நிலையில், தங்கையின் மூளை பிரண்டு போவா னேன்?

ஒருவேளை, நீபிகாவின் செலவு பல லட்சங்களைத் தாண்டிவிட்டதோ?

ஆனால், அதற்காகத் தந்தை இவ்வளவு கலங்கக் கூடுமா?

"என்னப்பா? நீபு என்ன பண்ணினாள்?" என்று மெது வாகக் கேட்டாள்.

"வேண்டாத சகவாசம்!" என்று எரிந்து விழுந்தவர், உட னேயே தன்னை அடக்கிக் கொண்டு, "சுகந்தன் எப்பேர்ப் பட்ட பிள்ளை! அவனை விட்டு, ஓர் ஆள் மயக்கிப் பய லோடு சுற்றுகிறாள். அவன்... அந்த ராஸ்கல்! அவன் ஒரு சரியான பொம்பளைப் பொறுக்கி. இல்லாவிட்டாலும், அவன் பக்கத்தில் கூட, இவள் போகலாமா? ஆனால்... அன்றைக்குச் சுகந்தன் போன் பண்ணி, பத்து நாளாகப் பார்க்கவே இல்லையே, என்று ஒப்பாரி வைக்கிறான், எனக்கு என்ன சொல்வது என்றே தெரியவில்லை! அவள் வந்ததும் கூப்பிட்டுக் கேட்டால், தலையில் கல்லைப் போடுகிற மாதிரி பேசுகிறாள்!" என்றார் கசந்த குரலில்!

"என்ன சொன்னாள்?" என்று சுருக்கமாக வினவினாள் தரங்கிணி.

"திருமணம் பற்றிய முடிவை மாற்றிக் கொள்ளப் போகிறாளாம்!"

"ஏனாம்?"

"அதுதான் சொன்னேனே, புத்தி புரண்டுவிட்டது என்று! அந்தப் பொறுக்கி ராஸ்கல், நிகிலனைத்தான் இப்போது



பிடித்திருக்கிறதாம்! அவனைப் பற்றி என்ன தெரியும் என்றால், அ... அதற்காகத்தான் அவனோடு, சிங்கப்பூர் வரை சென்று சுற்றிவிட்டு வரப் போகிறாளாம்!"

"ஓ!"

மூத்த மகளின் திகைப்பு, மகேசுவரனுக்குச் சற்று ஆறுதல் அளித்தது போலும்!

"நீயே பார்! அறிவுள்ளவள் பேசுகிற பேச்சா, இது? கல்யாணம் ஆகாமல், வெளிநாட்டுச் சுற்றுலாவுக்கு எவ னோடோ போனாள் என்றால், அப்புறம் நம் மானம், மரியாதை என்ன ஆவது? அதற்குப் பிறகு, உன் தங்கையை எவனாவது மணப்பானா? அதிலும், அந்த நிகிலன் நிச்சயமாக அவளை மணக்கப் போவதே இல்லை! அவன், நீபிகாவோடு பழகுவதே, என்னைப் பழி வாங்குவதற்காக எனும்போது..."

"மிஸ்டர் நிகிலன் எதற்காக, உங்களைப் பழிவாங்க வேண்டும்?"

இந்தக் கேள்வியைச் சற்றும் எதிர்பார்த்திராதவர் போல, மகளைத் திகைத்து நோக்கினார் மகேசுவரன்.

சில வினாடிகள், அங்கே மௌனம் நிலவியது.

2



மகேசுவரனின் திகைப்பு, தரங்கிணியை மேலும் குழப்பத்தில் ஆழ்த்தியது!

This memorandum contains advisory, consultative and deliberative material and is intended only for the person(s) named as recipient(s).

யாரோ ஒரு நிகிலன், அவளுடைய தந்தையை எதற்காகப் பழிவாங்க வேண்டும்? அப்படி அவர்களுக்குள் என்ன விரோதம்?

அதிலும், அவர் பெற்ற மகளை நாசப்படுத்தியேனும் பழி வாங்கும் அளவுக்கு அவனுக்கு என்ன கோபம்?

இந்த அளவு கீழ்த்தரமாக ஒருவன் பழி வாங்குவானா என்பதுதான் தந்தைக்கும் திகைப்பாக இருக்கிறது போலும்!

கேள்வியைச் சற்றே மாற்றி, "யாரப்பா, அந்த நிகிலன்? அவருக்கு உங்கள் மேல் என்ன கோபம்?" என்று வினவினாள் அவள்.

"அவன் என்னிடம் வேலை பார்த்தவன், தரங்கிணி. பண விஷயமாகக் கொஞ்சம் தகராறு வந்தது! வெளியேறிப் போய், நம்மதே போலத் தொழில் தொடங்கி, இப்போது பணத்தளவில் மேலே வந்துவிட்டான். அந்தத் திமிரில், என்னை இந்த மாதிரித் திருப்பி அடிக்கிறான்!" என்றார் தகப்பனார்.

தரங்கிணிக்கு ஆச்சரியமாக இருந்தது!

அலுவலகத் தகராறுக்குப் பழி வாங்குவதற்காக, இவ்வளவு கீழ்த்தரத்துக்கு ஒருவன் இறங்குவான் என்றே, தந்தை நம்புகிறாரே!

இத்தனைக்கும், பணத்தளவில் மேலே வந்துவிட்ட அவன், அவரைப் பணத்தாலேயே அடிக்கலாமே!

தொழில்துறையில், ஒருவரை ஒருவர் வலிக்க வைக்க எத்தனையோ வழிகள் இருக்கின்றனவே!

"அப்பா, ஒரு வேளை..." என்று அவள் தொடங்குகையில், மகேசுவரன் கை உயர்த்தி அவளது பேச்சை நிறுத்தினார்.



"இதற்குமேல், இந்தக் கச்சடா பற்றிப் பேச்க வேண்டாம்! உன்னிடம் பொறுப்பை ஒப்படைத்துவிட்டேன்! தீபுவைத் திருத்தி வழிக்குக் கொண்டு வருவது, அவளுடைய மூத்த சகோதரியான உன் பொறுப்பு! எப்படி என்று யோசித்துச் செய்!" என்று அழுத்தமான குரலில் கூறி முடித்தார்.

அவரது அதிகாரக் குரலில், எரிச்சல் வந்த போதும், அதை அடக்கிக் கொண்டு, "உங்களாலேயே முடியாத காரியம், அப்பா!" என்று நினைவுபடுத்திவிட்டு, "முயற்சி செய்கிறேன். ஆனால், தீபிகாவின் குணம் உங்களுக்கே தெரியும்! அதனால் வெற்றியில், அதிக நம்பிக்கை வைய்யாதீர்கள்!" என்று முடித்தாள் அவள்!

ஆனால், மகேசுவரன் கடைசி வார்த்தையை விடுகிறவர் அல்ல!

"அவளை மாதிரியே, உன்னையும் எனக்குத் தெரியுமே! நீ நினைத்தது எதையாவது, நிறைவேற்றாமல் விட்டிருக்கிறாயா? பாட்டியின் கடைசிக் காலம் என்ற சாக்கில், வீட்டைவிட்டே கிளம்பி வந்து... ஒரு வருமானத்தையும் ஏற்படுத்திக் கொண்டு... செய்யவில்லையா? எல்லாம் என்னை எதிர்த்துத்தான்! எதுவும் எனக்குப் பிடிக்கவில்லை தான்! முக்கியமாக, மந்திரி மகனை மணக்க மறுத்தது! அதெல்லாம் முடிந்த கதை! ஆனாலும், நீ எதையும் வெளிப்படையாகக் காட்டிக் கொள்ளாமலே, செய்து முடிக்கிறவள் என்பது எனக்கு நன்றாகத் தெரியும்! இதையும், அப்படியே செய்து முடி! அதோ, டிரைவர் வந்துவிட்டான். நீ வீட்டுக்குள் போ! நான் கிளம்புகிறேன்!" என்றார் அவர்!

"பாட்டி இப்போது ரொம்பவும் பலவீனமாகி விட்டார்கள், அப்பா! ஒரு தரம் உள்ளே வந்து..." என்றபடி காரிலிருந்து இறங்கினாள் பெண்.

This memorandum contains advisory, consultative and deliberative material and is intended only for the person(s) named as recipient(s).

கைகடிகாரத்தைத் திருப்பிப் பார்த்தார் அவர். "ஊகும்! இப்போது அவகாசம் இல்லை, தரங்கிணி. தன் பெண் அப்படி, இப்படி என்று இழுத்து, இழுத்துப் பேசி நேரமாக்கி விடுவார்கள். என் வேலை கெட்டுவிடும்! நிஜமாகவே தேவை என்றால் அப்போது வருகிறேன்! ரங்கா, ம்!"

முதலாளியின் ஒரு 'ம்'முக்குப் பணிந்து, அவசரமாகக் காரில் ஏறி, ரங்கன் காரை வேகமாக ஓட்டிச் செல்வதைப் பார்த்த தரங்கிணிக்கு, உள்ளூரக் கோபம் குமுறியது.

நிஜமாகத் தேவை என்றால் வருவாராமே! அதற்கு என்ன அர்த்தம்?

மனித உயிரைப் பற்றி, அவருக்கு எவ்வளவு உதாசீனம்!

ஆனால், கட்டிய மனைவியின் உயிரைப் பற்றியே, அவர் கவலைப்படவில்லையே! அவளை மணந்ததன் மூலம், அவர் விரும்பிய நிறுவனம் கைக்கு வரும்வரைதான், மனைவி கருணாகரியை அவர் உள்ளங்கையில் வைத்துத் தாங்கியது! நிறுவனம் முழுமையாக அவரது உடைமையாக ஆனபிறகு, அதைப் பெற்றுத் தந்த மனைவி, அவருக்கு மறந்து போனாள்!

தீபிகா பிறந்து, ஒரு விஷக் காய்ச்சலும் தாக்கி, மிகவும் உடல் சோர்ந்து பலவீனப்பட்டிருந்த கருணாகரிக்குக் கணவனின் ஆதரவு மிகவும் தேவைப்பட்ட நேரம் அது!

ஆனால், இத்தனை ஆண்டுகளாகக் கணவன் தன்னிடம் காட்டிய அன்பெல்லாம், மாமனாரை வசப்படுத்தி, அவரது நிறுவனத்தைப் பெறுவதற்காகவே என்பது தெளிவாகப் புரிபடவும், கருணாகரி மனம் உடைந்து போனாள்!

தானும், வைத்தியர்களுமாக, எவ்வளவோ முயன்றும், மகளின் உயிரை, மேற்கொண்டு பத்தாண்டுகளுக்கு மேல்



பிடித்து வைக்க முடியாததன் காரணம், மகேசுவரனின் அந்த மோசடியின் விளைவுதான் என்பது, தங்கம்மாவின் நிச்சயமான கருத்து! கருணாகரியின் மென்மையான மனம் தேறவே இல்லாததோடு, உயிரையும் உருக்கிப் பறித்தே விட்டது!

எப்போதும் இல்லை என்றாலும், அவ்வப்போது, தங்கம்மா இது பற்றிப் பொருமுவது உண்டு! அதுவும், மருமகனைப் பார்க்கும் போது, எப்பேர்ப்பட்ட கிளியாக மகளை வளர்த்தாள் என்பது, வெளிப்படாமல் இராது!

ஒரே பெண்... நிறையப் பணம், அருமை பெருமையாக வளர்த்ததில் ஆச்சரியமும் இல்லைதான்.

ஆனால், அந்தப் பெருமையின் உள்ளே மறைந்திருக்கும் உண்மை கிளியை வளர்த்துப் பூனையிடம் கொடுத்தோமே என்ற வருத்தம், மகேசுவரனுக்குப் புரியாமலா போகும்?

ஒரு மரியாதைக்காக மாமியாரைப் பார்க்க வருவதைக் கூட, அவர் அடியோடு நிறுத்திவிட்டார்! ஏன், இப்போது மகளுக்காகக் கூட வந்தது இல்லை!

ஒருவேளை, அடி மட்டத்திலிருந்து மேலே வருகிறவர்களுக்கு, அந்த ஏற்றம் ஒன்றுதான் பெரிதாகத் தோன்றுமோ? மற்ற அனைத்திலும் பெரிதாக?

உள் மனம் தந்தையை நியாயப்படுத்தத் தொடங்குவதை உணர்ந்து, தன்னை நினைத்தே தோளைக் குலுக்கியவாறு, வீட்டினுள் சென்றாள் தரங்கிணி!

எல்லாவற்றையும் விட... மகேசுவரன் களைப்புற்றிருந்தது, அவளது மனதை உறுத்தியது!



This memorandum contains advisory, consultative and deliberative material and is intended only for the person(s) named as recipient(s).

அவர் அப்படிக் களைப்பை வெளியே காட்டுகிறவர் அல்ல!

ஒழுங்காக மருத்துவப் பரிசோதனை செய்து கொள்கிறாரா என்று தங்கையிடம் கேட்க வேண்டும் என்று, மனதிற்குள் குறித்து வைத்துக் கொண்டாள் தரங்கிணி! அவள் இதையெல்லாம் கவனிக்கிறவள் இல்லை என்றாலும், தந்தையின் சோர்வு, அவளையும் உருத்தியிருக்கும்தானே?

அப்படியே, தங்கையிடம் எப்படிப் பேசுவது, என்ன என்று திட்டமும் அவளது மனதுள் உருவாயிற்று! ஏனெனில், நேரடியாக தீபிகாவிடம் அறிவுரை எதையும் சொன்னால், அவள் உடனே முருங்கமரத்தில் ஏறிவிடுவாள்! அப்புறம், தோல்வியோடுதான் திரும்ப நேரும்!

வெற்றி தோல்வியை விட, அந்த நிகிலன் அவ்வளவு மோசமானவனாக இருக்கும்போது, அவனிடம் இருந்து, தங்கையைக் காக்கும் கடமையும், அவளுக்கு இருக்கிறது தானே?

நினைத்தது போலவே, திடுமென மூத்த சகோதரியைப் பார்த்ததும், தீபிகாவின் கண்களில் ஐயம் படர்ந்தது! "என்ன, திடீரென்று வந்திருக்கிறாய்? என்ன விஷயம்?" என்று கேட்கவும் செய்தாள்!

"ஆகா! என் தங்கைக்கு இவ்வளவு விருந்துபசாரம் செய்யத் தெரியும் என்று எனக்குத் தெரியாதே! நல்ல கோடை வெய்யிலில், ஸ்கூட்டியில் வந்து, வேர்த்து, விறுவிறுத்து நிற்பவளுக்கு, ஒரு ஜூஸ் கூடக் கொடுக்காமல், ஏன் வந்தாயா? ஆனாலும் இவ்வளவு அன்பு இருக்கக் கூடாதும்மா!" என்று கிண்டலடித்தாள் தமக்கை!



"வராதவள் வந்தால், வேறு எப்படிக் கேட்பதாம்?" என்று விடாமல் கேட்டாலும், தங்கையின் குரல் சற்றே இயல்புக்கு மாறியிருந்தது!

"வராதவளா? அண்ணி மாலாவின் பிறந்தநாளைக்கு நான் வந்து, இரண்டு மாதம்கூட ஆகவில்லை!"

"அதைத்தான் நானும் சொல்லுகிறேன்! இன்றைக்கு யார் பிறந்த நாளும் இல்லையே, காரணம் இல்லாமல் தலையைக் காட்டாதவள், இன்று எதற்காக வந்தாய் என்பதுதான் கேள்வி!"

காரணத்தைத் தயார் பண்ணிக் கொண்டு வந்ததற்காகத் தன்னையே பாராட்டிக் கொண்டு, பெரியவள் சொன்னாள், "காரணம் இருக்கிறது, தாயே, இருக்கிறது! இந்தா, என் ஓவியங்களைப் படமெடுத்துச் சின்னதாக்கி, ஆல்பத்தில் போட்டு வைத்திருக்கிறேன்! உனக்குத்தான் பெரிய இடத்துச் சிநேகிதிகள் ஒரு பட்டாளமே உண்டே! ஒன்றிரண்டை விற்றுத் தந்தாயானால், ஏதோ எனக்கு இரண்டுவேளைச் சாப்பாட்டுச் செலவுக்கேனும் ஆகும்!" என்று, பலவீனமான குரலில் தரங்கிணி கூறவும் தீபிகா கலீரெனச் சிரித்தாள்!

"இரண்டு வேளைச் சாப்பாட்டுச் செலவுக்கா? பாட்டி வீட்டில், உன் சாப்பாட்டுக்குப் பணமா? எங்கே, ஒரு தரம் பாட்டியிடம் பணம் கொடுத்துப் பார், என்ன நடக்கிறது என்று பார்க்கலாம்! அத்தோடு, உன் ஓவியத்தின் விலையில், உனக்கு இரண்டே வேளைச் சாப்பாடு என்றால், நீ என்னை விடச் செலவாளி ஆகிவிட்டாய் என்று அர்த்தம்!" என்று மேலும் நகைப்புடனேயே, தமக்கை நீட்டிய ஆல்பத்தைப் பார்த்தாள், தீபிகா!

This memorandum contains advisory, consultative and deliberative material and is intended only for the person(s) named as recipient(s).

'அப்பாடி' என்று தரங்கிணி மூச்சு விடுமுன், "ஆனால், நிஜமாகச் சொல் அக்கா! பாட்டி வீட்டுக்கு அப்பா, வரவே இல்லையே?" என்று மீண்டும் விசாரணை செய்தாள்!

"பாட்டி வீட்டுக்கா? அப்பாவா? நடக்கிற காரியமா? நிச்சயமாக, நான் அறிய இல்லையம்மா!" என்று கையை விரித்தாள் தரங்கிணி.

தெரு மரத்தின் அடியில் காரில் இருந்ததை, வீட்டுக்குள் வந்ததாகச் சொல்ல முடியாதுதானே?

ஆல்பத்தின் பக்கங்களை, விரல்கள் தன் போக்கில் திருப்ப, ஓரக் கண்ணால் நோக்கி "அப்படியானால், சுகந்தன்? அவர்தான் ஏதாவது அளந்தார் போல?" என்று கேட்டாள் தீபிகா.

முதல் தடவையாகத் தரங்கிணியின் மனம் அதிர்ந்தது!

சுகந்தன், தமக்கையிடம் பேசுவது, தீபிகாவுக்குப் பிடிக்காது! ஒரு தரம், ஏதோ உடையில், உன் அக்கா அழகாக இருக்கிறாள் என்று ஏதோ சொல்லிவிட்டு, சுகந்தன் பட்ட பாடு!

தரங்கிணியையும், அவள் விடவில்லை! நீ எப்படி, இந்த மாதிரி அலங்கரித்துக் கொண்டு, சுகந்தன் முன் வரலாம்? பணக்காரர் என்பதால் சபலம் தட்டுகிறதா? அவர் பக்கம் திரும்பினால் தெரியும் சேதி என்று, வாய்க்கு வந்தபடி உளறிக் கொட்டினாள்.

அப்போது பெரிதும் மனம் கலங்கினாலும், தங்கையின் பேச்சு முறையை அனுபவத்தில் அறிந்திருந்ததால், அதை ஒதுக்கித் தரங்கிணியால், தீபிகாவோடு தொடர்ந்து உறவு வைத்துக் கொள்ள முடிந்தது! ஆனால், சுகந்தனிடம் நின்று பேசாமல், எச்சரிக்கையோடு நடந்து கொள்வாள்!



எதற்கு, அசிங்கமாக, இப்படியொரு பேச்சு கேட்பது?

ஆனால், இப்போது சுகந்தனும் தரங்கிணியும் சர்வ சாதாரணமாகப் பேசிப் பழகுகிறவர்கள் என்கிற பாவனையில் தீபிகா பேசவும், மற்றவள் திகைத்தாள்!

அவன் என்னுடையவன்... என்கிற எச்சரிக்கையைக் காணோமே!

கலக்கத்தைக் காட்டிக் கொள்ளாமல், "யார்? சுகந்தனா? உனக்கு ஓர் அக்கா இருப்பதே, அவருக்கு நினைவிருக்கிறதா என்று, எனக்குச் சந்தேகம்! அப்படியிருக்க, அவராவது, என்னிடம் அளப்பதாவது! அவர் உன் ஆள், அம்மா!" என்று விளையாட்டுக் குரலிலேயே நினைவூட்டினாள்.

"ச்சு! அதெல்லாம் இல்லை!" என்று அலட்சியமாகத் தோளைக் குலுக்கினாள் தீபிகா!

ஆச்சரியமாகப் பார்த்து, "இரண்டு மாதங்களாக, வேறு மாதிரிப் பேச்சு அடிபட்டதாக அல்லவா, ஞாபகம்! திடீரென்று என்ன ஆயிற்று? ஊடலா?" என்று, தரங்கிணி புன்னகையுடனேயே கேட்டாள்.

உதட்டைக் கடித்தபடி ஒரு கணம் யோசித்தாள் சின்னவள். பிறகு தமக்கையை நேராக நோக்கி, "என்னைப்போல ஓர் அழகான, பணக்காரப் பெண் வேண்டும் என்றால், கிடைத்த வாய்ப்பில் கொத்திக் கொண்டு போயிருக்க வேண்டும்! அக்கா வரவேண்டும். ஆட்டுக்குட்டி வரவேண்டும் என்று, திருமணத்தைத் தள்ளிப் போட்டால், இப்படிக் கோட்டை விட்டுவிட்டு, அசமஞ்சம் போல நிற்க வேண்டியதுதான்!" என்றாள், சவால் விடுவது போல.

This memorandum contains advisory, consultative and deliberative material and is intended only for the person(s) named as recipient(s).

வெறும் கதை கேட்கும் சுவாரசியத்தை மட்டும் காட்டி, ''அதாவது, இந்தத் தங்க மீனைக் கொத்திக் கொண்டு போக, வேறு கொக்கு வந்துவிட்டது என்கிறாய்!''என்று கேட்டாள் பெரியவள்.

''வெறும் கொக்கு அல்ல, பறவைகளின் ராஜாவான கருடன்!'' என்றாள் தீபிகா கர்வத்துடன்!

''கருடனோ, கொக்கோ, இரண்டுமே மீனைக் கபளீகரம் செய்வதுதான் வழக்கம்!''

''நிகிலனைப் பார்த்தால், இப்படிச் சொல்ல மாட்டாய்!''

புருவம் சுருக்கினாள் தரங்கிணி. ''நிகிலன்... அந்த ஆளா...?''

''தெரியும்தானே? சொன்னது அப்பாதானே? இல்லை என்று பொய் சொன்னாயே! எனக்குத் தெரியும்! எனக்குத் தெரியும்! நன்றாகத் தெரியும்!'' என்று, மீண்டும் பாய்ந்தாள் தங்கை!

''இல்லையில்லை, அப்படியில்லை! எங்கோ... எதிலோ... ஆங்! நினைவு வந்துவிட்டது! ஒரு பத்திரிகையில் படித்தேன்! யாரோ இரண்டு பெண்களில், நிகிலன் யாரை மணப்பான் என்று அலசி ஆராய்ந்திருந்தார்கள்!'' என்று தரங்கிணி விவரித்தாள்.

''ச்சு! குப்பைப் பத்திரிகை! பத்திரிகை விற்பனையைப் பெருக்குவதற்காகச் சும்மா ''கிசுகிசு'' எழுதியிருப்பார்கள்!'' என்றாள் தீபிகா அலட்சியமாக!

''நெருப்பில்லாமல் புகையாது என்றும் சொல்லுவார்கள்!''



''புகையே இல்லை! வெறும் பனி மூட்டம்! விடு! அவர், இன்று எனக்காக எவ்வளவு செலவு செய்யப் போகிறார் என்று தெரிந்தாலே உன் சந்தேகம் போய்விடும்! நட்சத்திர ஹோட்டலில், இன்று இந்தியாவிலேயே சிறந்த 'டிஜே' நடத்தும் டிஸ்கோவுக்கு எனக்குப் பிடித்த எத்தனை பேரை வேண்டுமானாலும் அழைத்துக் கொண்டு வரச் சொல்லியிருக்கிறார்! அதற்கு...''

வாய்ப்பை விடாமல் உள்ளே புகுந்தாள் தரங்கிணி. ''அட! நானும் உனக்குப் பிடித்தவள்தானே? மிகவும் அன்பான, உடன்பிறந்த ஒரே அக்கா! எனவே, எனக்கும் அழைப்பு உண்டு என்று சொல்லு!'' என்று உற்சாகம் காட்டிக் கேட்டாள்.

தீபிகாவின் தயக்கமும், முக மாறுதலும், இல்லை, இல்லை என்று சொல்லாமல் சொல்லின!

அவள் தயங்கும்போதே, ''அப்படியே உன் 'கருடன்' மெய்யாகவே கருடன்தானா? அல்லது வெறும் ஒற்றைக்கால் கொக்குதானா என்றும் தெரிந்துகொள்வேன்! வரலாமில்லையா?'' என்று மறைமுகமாகத் தங்கையை வற்புறுத்தினாள் தமக்கை!

அதற்கு மேல் மறுக்க முடியாமல், ''ம்ம்ம்... வா! என் சிநேகிதிகள் எல்லோரும், செட், செட்டாக வருகிறார்கள்! நீயும் யாரையாவது. ஆனால், உனக்குத்தான் அந்த மாதிரி நண்பர்களே கிடையாதே! சரி, பரவாயில்லை, வா! சமாளித்துக் கொள்ளலாம்! அப்புறம்...'' என்ற சின்னவளின் முகத்தில், மீண்டும் சவால் விடும் தோற்றம் தெரிந்தது!

''அப்புறம், நான் நிகிலனோடு சிங்கப்பூருக்குப் போகப் போகிறேன்! தயவு பண்ணி, ஏதாவது புத்திமதி சொல்லத்

This memorandum contains advisory, consultative and deliberative material and is intended only for the person(s) named as recipient(s).

தொடங்கிவிடாதே! ஒரு பயனும் இராது!'' என்றாள் விறைப்புடன்.

தோளைக் குலுக்கி, ''பதினெட்டு வயது ஆகிவிட்டால், ஓட்டுப் போடுகிற உரிமை உண்டு! நாட்டின் தலையெழுத்தையே கையில் வைத்திருப்பவளுக்குத் தன், தலையெழுத்தை எப்படி எழுத வேண்டும் என்று தெரியாதா?'' என்றாள் மற்றவள் அசுவாரசியமாக, ''முடிந்தால், சிங்கப்பூரில் கோடாலித் தைலம் ஒரு பாட்டில் வாங்கிவர முடிகிறதா என்று பார்! அது நல்ல தலைவலித் தைலம்!'' என்றாள் அதே அசட்டையோடு!

ஆத்திரத்துடன் முறைத்துவிட்டு, ''ரொம்பத்தான் அலட்சியம் காட்டாதேக்கா! நிகிலனைப் பார்த்தால், நீயே மயங்கி விடுவாய்'' என்றாள் தீபிகா!

''அப்படி நேராமல், கடவுள் காப்பாற்றட்டும்.''

''ஏனோ!''

''இது வள்ளி, தேவானை யுகம் அல்ல. நாம் இருவருமே அவனை மணப்பதற்கு!''

அடக்க மாட்டாமல், விழுந்து விழுந்து சிரித்தாள் தீபிகா!

அவ்வளவு நேரமாக இருந்த கவனமும் எரிச்சலும் மாறி, தீபிகா இயல்பாகச் சிரித்தது, அப்போதுதான் விரிந்த மலர் காற்றில் ஆடுவது போலப் பார்க்க மிகவும் அழகாக இருந்தது!

இந்த மலர்ச்சியை, அந்த நிகிலன் கெடுத்து விடாமல் காப்பாற்ற வேண்டும் என்ற வேகமும் கூடவே கவலையும் தரங்கிணிக்கு உண்டாயிற்று!

ஏனென்றால், தன் தலையில், தானே மண்ணை அள்ளிப் போட்டுக் கொள்ளும் இந்தப் பிடிவாதக்காரி, சொன்னால்



கேட்பவள் அல்லவே! கேட்க மாட்டாள் என்று, லட்சக் கணக்கில் பந்தயம் கூட வைக்கலாம்! அந்த மாதிரிப் பெண்!

கவலையைக் காட்டிக் கொள்ளாமல், அங்கே வந்ததற்காகச் சொன்ன காரணத்தை மெய்யாக்கிக் காட்டுவதற்காக, தன் பட விற்பனைக்கு உதவி செய்ய மறக்க வேண்டாம் என்று கேட்டுக் கொண்டு, எந்த ஹோட்டல், எத்தனை மணிக்கு என்ற விவரங்களைக் கேட்டபோது, தன் தலையெழுத்துக்கூட, அங்கே மாற்றி எழுதப்படப் போகிறது என்று, தரங்கிணிக்குத் தெரியாது!

## 3



தீபிகாவை எப்படி அந்த நிகிலனிடம் இருந்து காப்பாற்றுவது என்று தீவிரமாக யோசித்துப் பார்த்தாள் தரங்கிணி!

அவளுக்குப் புத்தி சொல்வது, படு முட்டாள்தனம்! இது உனக்கு நல்லது என்றால் ஏற்பதோ, கெட்டது என்றால் விடுவதோ, தீபிகாவுக்குப் பழக்கம் இல்லை!

தன் அழகில், மிகுந்த நம்பிக்கை உடையவள் அவள்!

அந்த நிகிலன் அப்பாவைப் பழி வாங்குவதற்காகத்தான் உன்னிடம் பழகுகிறான் என்று சொன்னால், நிச்சயமாக, அவள் அதை ஒத்துக் கொள்ளப் போவதில்லை! தன் அழகில் பொறாமை கொண்டு, தன்னை மட்டம் தட்ட முயல்வதாகச் சொல்லுவாளே தவிர, என்னதான் கெஞ்சிக் கூத்தாடினாலும், உண்மையை அவள் ஏற்பது, நடக்காத காரியம்!

This memorandum contains advisory, consultative and deliberative material and is intended only for the person(s) named as recipient(s).

சரி, தீபிகா சின்னப் பெண், அவளது வாழ்வைக் கெடுத்துவிடாதே என்று அந்த நிகிலனைக் கேட்பதிலும் பயன் இருக்கும் என்று, தரங்கிணிக்குத் தோன்றவில்லை!

தன் பழைய முதலாளியைப் பழிவாங்குவதற்காக ஒரு சின்னப் பெண்ணின் வாழ்வை நாசமாக்கத் திட்டமிட்டுச் செயல்படும் அவன், இந்த மாதிரி நியாய அநியாயங்களுக்கு மதிப்புக் கொடுக்க மாட்டான்!

எனவே, அவனிடம் கேட்பதில் பயனிராது!

சம்பந்தப்பட்ட இருவரிடமும் பேசிப் பயனில்லை! எனவே, வேறு வழிதான் தேடியாக வேண்டும் என்ற முடிவுக்கு அவள் வந்தபோது, அப்படியொரு வழி, அவளைத் தேடி வந்தது!

"சின்னம்மா, சுகந்தன் அய்யா உங்களைப் பார்க்க வந்திருக்கிறாரு. ஹாலிலே இருக்கிறாரு!" என்று வேலைக்காரி வந்து சொன்னபோது, தரங்கிணிக்கு முதலில், ஐயோ என்றுதான் இருந்தது!

இப்போது, இவனை வேறு சமாதானப்படுத்தியாக வேண்டுமா?

உள்ளூரச் சலித்துக் கொண்டு வந்தவளுக்குச் சட்டென ஒரு யோசனை தோன்றிவிட, முகத்தில் மலர்ச்சியுடனேயே, வருங்கால மைத்துனனாக நிச்சயிக்கப்பட்டவனை வரவேற்றாள்!

"வாருங்கள், சுகந்தன்! ஏது, தீபிகா தவிர, நாங்களெல்லாம் கூட உங்கள் நினைவுக்கு வருகிறோம் போல?" என்று கிண்டலடித்து வரவேற்றாள்!

ஆனால், சுகந்தனின் முகம் அழுது வடிந்தது!



"நான் அவளையே நினைத்து என்ன பயன், தரங்கிணி? அவளுக்குத்தான், நான் ஒருவன் இருப்பதே மறந்துவிட்டதே! இல்லாவிட்டால், கண்டவனோடு சுற்றுவாளா?" என்றான் முகத்துக்கேற்ற குரலில்!

அவசரமாகச் சுற்றிலும் பார்த்தாள் தரங்கிணி!

பழச்சாற்றை வைத்துவிட்டுப் போன பணியாள், நல்லவேளையாகக் காது கேளாத தூரம் சென்றிருந்தான்.

வயதும், நோயுமாகப் பாட்டி பெரும்பாலும் அறைக்குள்ளேயே முடங்கிவிட்டது கூட, இப்போது கொஞ்சம் நிம்மதியாகத்தான் இருந்தது! அவனது புலம்பல் மட்டும் பாட்டிக்குக் கேட்டிருந்தால், பாவம், எவ்வளவு வருத்தப்பட்டிருப்பார்கள்!

அதற்குள், தரங்கிணியின் பார்வையைக் கவனித்துவிட்டிருந்த சுகந்தனும், முகம் கன்ற, "சாரி!" என்று வருத்தம் தெரிவித்தான்! "ஆனால், என்னால் தாங்கவே முடியவில்லை, தரங்கிணி! வேறு எதையும் நினைக்கக் கூட முடியவில்லை!" என்றான் வருத்தத்துடன்!

"இயற்கைதான்! இப்போது என்ன செய்யலாம் என்று இருக்கிறீர்கள்?" என்று அவனிடம் தரங்கிணி வினவினாள்!

சோகமாகக் கைகளை விரித்தான் சுகந்தன், "நான் என்ன செய்ய முடியும், தரங்கிணி? வயது வந்த பெண் என்பதால், உன் அப்பாவாலேயே ஒன்றும் செய்ய முடியவில்லையே! நான் என்ன செய்யட்டும்?"

தந்தைக்குத் தகவல் இவன் வழியாகத்தானா என்று ஊகித்தவாறு, "உங்களிடம் என்ன சொன்னார்?" என்று விசாரித்தாள் அவள்.

This memorandum contains advisory, consultative and deliberative material and is intended only for the person(s) named as recipient(s).

''என்னிடம் அவள் பேசுவதே இல்லை! இன்றுதான் போனில் கிடைத்தாள். ஆனால், அந்தப் பயலோடு டிஸ்கோ போகிறாளாமே!''

கண்ணீர் விடாத குறை!

''அவர்கள் இருவரும் மட்டுமல்ல, நிறையப் பேர் வரப் போகிறார்கள்! நானும்தான். நீங்களும் என்னோடு வருகிறீர்களா?''

விழிகள் தெறித்து விடும்போலப் பார்த்தான் சுகந்தன்!

''நானா? அங்கேயா? எதற்கு?''

''தீபுவிடம் பேசத்தான்! அந்த இடத்தில் வைத்துப்பேச முடியாது என்று ஓட முடியாதில்லையா?''

''நா...ன்... அங்கே வந்தால் நன்றாக இருக்குமா? அந்த... அவனோடு சண்டை வந்துவிட்டால் அநாகரீகமாகத் தோன்றாதா?'' என்று குழப்பமும் தயக்கமுமாக, சுகந்தன் தடுமாறினான்.

அவனை யோசனையாகப் பார்த்துவிட்டு, ''இதை நீங்கள்தான் முடிவு பண்ண வேண்டும், சுகந்தன்! உங்களுக்குத் தீபிகா வேண்டுமா, வேண்டாமா? அவளுக்காகச் சற்று அநாகரீகமாக நடந்துகொள்ளலாமா, கூடாதா?... எல்லாம் நீங்கள்தானே யோசிக்க வேண்டும்?'' என்றாள் தரங்கிணி.

குற்றம் சாட்டும் பார்வையுடன், ''தீபுவுக்காக, நான் என்ன வேண்டுமானாலும் செய்வேன் என்று உனக்குத் தெரியாதா, தரங்கிணி? ஆனால், பிரயோஜனப்பட வேண்டுமே! அத்தோடு, உன்னோடு வந்தேன் என்றால்,தீபு கோபப்படுவாளே! அதுதான் ரொம்பக் கவலையாக இருக்கிறது!'' என்றான் அவன்.



முகத்தில் குறும்பு மிளிர, ''கோபம்தானே? படட்டுமே! அதுதான் ரொம்ப நல்லது! கொஞ்சம் யோசித்துப் பாருங்கள், சுகந்தன்!'' என்று புன்னகை செய்தாள் தரங்கிணி!

சுகந்தனின் திகைப்பு, வியப்பாய் மாற, ''ஓகோ!'' என்றான் அவன். ''நான், உன் கையைப் பிடித்துக் கொண்டு சென்றால், இன்னமும் அதிகமாகக் கோபம் வருமல்லவா? ஒட்டி நின்று கொண்டு காதில்...'' என்று, அவன் மேலே திட்டமிடுகையில், தரங்கிணி அவசரமாகக் குறுக்கிட்டாள்!

''அதெல்லாம் அவசியம் இல்லை, சுகந்தன்! தீபிகாவின் காது கேட்க, என் அழகைப் பற்றி ஓரிரண்டு வார்த்தைகள் சொன்னால்... சும்மா சொன்னால் போதும்!'' என்றாள்.

''சும்மா என்ன? நீயும் நிஜமாகவே அழகுதான், தரங்கிணி! ஆனால், அது பற்றிப் பேசினால் தீபிகாவுக்குப் பிடிக்காதே என்றுதான் நான் கவனியாதது போல இருந்துவிடுவேன்!'' என்று அசடு வழிந்தான் அவன்!

''தெரியும், தெரியும்!'' என்று சிரித்தாள் தரங்கிணி. ''உண்மையில், இந்தப்பிரச்சனையில் எனக்கு நம்பிக்கை வந்ததே, அதை நினைத்துதான்!'' என்று அவள் சொன்னபோது, சுகந்தன் முகத்தில்கூடச் சின்னதாய் ஒரு புன்னகை எட்டிப் பார்த்தது!

தொடர்ந்து ஒரு மிரட்சியும் தோன்றவும், ''பயப்படாதீர்கள், சுகந்தன். அந்த ஹோட்டலில், அத்தனை பேர் நடுவில் வைத்து, தீபு உங்களைத் திட்டமாட்டாள்!'' என்று அவள் தேற்றவும், ''ஆமாமில்லை!'' என்று ஆறுதல் பெருமூச்சு விட்டான் அவன்.

தரங்கிணியால், இப்போது சிரிப்பை அடக்க முடியவில்லை!

This memorandum contains advisory, consultative and deliberative material and is intended only for the person(s) named as recipient(s).

தரங்கிணி எதிர்பார்த்த மாதிரியே, அவளும் சுகந்தனும் சேர்ந்து வந்தது, தீபிகாவுக்குப் பிடிக்கவில்லை!

பிடிக்கவில்லை என்று சொல்லுவது, ரொம்பவும் பூச்சு வேலை செய்து சமாளிப்பது எனலாம்!

ஏனெனில், அவர்களைப் பார்த்ததுமே, சின்னவளின் கண்கள், இரு நேர் கோடுகள் போல, அப்படியே இடுங்கிப் போயின!

சுகந்தனோடு சந்தோஷமாகப் பேசி வருவது போல, அவனைப் புன்னகையோடு நோக்கிவிட்டு, இலகுவாகத் திரும்பித் தங்கையைப் பார்த்த தரங்கிணி, அவசரமாக உடன் பிறந்தவளின் அருகே சென்றாள். "தீபு, என்னம்மா, கண்ணு லைனர் போட மறந்து விட்டாயா? கொஞ்சம் இடுங்கினாற் போலக் கண் சின்னதாகத் தெரிகிறதே!" என்று கரிசனமாகக் கேட்டாள்!

அவசரமாகக் கைப்பையைத் திறந்து, அதிலிருந்து கண்ணாடியில் முகத்தைப் பார்த்துவிட்டு, "அதெல்லாம் ஒன்றுமில்லை! ஐ லைனர் தீட்டித்தான் இருக்கிறேன்! இந்த உடைக்குச் சரியாக ஐ ஷாடோ கூடப் போட்டிருக்கிறேன், பார்!" என்று, கண்களை விரித்துக் காட்டினாள் தீபிகா.

தங்கையின் கண் அலங்காரத்தை ஆராய்ந்து விட்டு, "ம்ம்ம்... ஆமாம்! ஆனால், நாங்கள் வரும்போது உன் கண் ஏனோ சின்னதாகத்தான் தெரிந்ததும்மா!" என்றாள் தமக்கை அப்பாவியாய்!

காரணம் நினைவு வந்தாற்போலத் தீபிகாவின் கண்கள் சட்டெனக் கனன்றன!

"கண் இடுங்கித் தெரிந்தது என்றால், எனக்கு ரொம்பக் கோபம்! தெரிந்து கொள்!" என்றாள் அவள் ஆத்திரத்தோடு!



இப்போது, தரங்கிணி விழிகளை விரித்தாள், "கோபமா ஏன்?" என்று புரியாதவள் போலக் கேட்டாள்!

அதற்கு மேல் கட்டுப்படுத்த முடியாமல், "தெரியாதவள் போலக் கேட்க வேறு செய்கிறாயா? நீ எப்படிச் சுகந்தனை, உன்னோடு கூட்டிக் கொண்டு வரலாம்?" என்று தாழ்ந்த குரலில் சீறினாள் சின்னவள்!

"புரியவில்லையே! நீதானே, யார் வேண்டுமானாலும் வரலாம் என்று அந்த... அவன் பேரென்ன, நி... நிகிலன் கூறியிருப்பதாகச் சொன்னாய்? அப்புறம் என்ன?" என்று, வேண்டும் என்றே தப்பாகப் புரிந்து கொண்டு, விழி மலர்த்திப் பேசினாள் தரங்கிணி.

"ஐயோ...!" என்று தலையில் அடித்துக் கொண்டாள் தங்கை. "நான் கேட்டது, சுகந்தனை, நீ எப்படிக் கூட்டி... சுகந்தனை, எப்படி உன்னோடு ஜோடி சேர்த்து அழைத்து வரலாம் என்றுதான்! உன் களிமண் மண்டைக்குள் ஏறியதா, இல்லையா?" என்றாள் கோபமாக.

"இல்லையே!" என்று கையை விரித்தாள் பெரியவள். "அவர்தான், உனக்கு வேண்டாம் என்று விட்டாயே! அப்புறம், அவர் என்னுடன்... யாருடன் வந்தாலும், உனக்கு என்ன?"

ரொம்பவும் சாதாரணமாகப் பேசுவது போலவே, நெற்றிப் பொட்டில் அறைந்தாற் போலத் தரங்கிணி கேட்டு விட்டாள்.

பதில் சொல்ல முடியாமல் சில கணங்கள் தவித்த சின்னவள், அந்தப் பேச்சையே கைவிட்டு, "சுகந்தன் பெரிய பணக்காரர் என்பதால், நீ அடித்துக் கொண்டுபோய் விட

This memorandum contains advisory, consultative and deliberative material and is intended only for the person(s) named as recipient(s).

லாம் என்று நினைத்தாயா? அவர் அப்படியெல்லாம் உன் னிடம் வழிய மாட்டார்! அப்படி ஏதாவது ஆசை இருந்தால், அடியோடு விட்டுவிடு! என்றைக்கானாலும், நான் இப்படி ஒரு விரல் அசைத்துக் கூப்பிட்டால் கூட, என்னிடம் ஓடியே வந்துவிடுவார்!'' என்று, தலையை நிமிர்த்தி, உதட்டைச் சுழித்துப் பெருமையடித்தாள்!

''ஓ... அப்படியா?'' என்று அசுவாரசியமாகச் சுற்றிலும் பார்வையை ஓட விட்டாள் தரங்கிணி. ''எல்லாம் தெரிந்த முகங்கள்தான்! அந்தத் துமிலன். இல்லையில்லை, நிமி... நிகிலன்... என்ன பெயர் வைத்திருக்கிறார், பார்! மனதில் நிற்கவே மாட்டேன் என்கிறது! அவர், எங்கே, ஆளையே காணோம்?'' என்று விசாரித்தாள்.

தமக்கையை முறைத்துப் பார்த்தவாறே, ''எல்லாம் வரு வார்! ஏதோ வேலை வந்துவிட்டதால், தாமதமாக வருவதாக போன் செய்தார்! ஆனால், நாம் பேசிக் கொண்டிருந்த விஷயம் அது அல்ல!'' என்றாள் தீபிகா.

தங்கையின் பிற்பாதிப் பேச்சைக் கவனியாதது போல, ''நல்ல வேளை! எங்கே, ஆள் வரவே மாட்டாரோ; பில் லுக்குப் பணத்தை நாம்தான் கட்ட வேண்டுமோ என்றெல் லாம் கவலையாகிப் போயிற்று! உன் கைச்செலவுப் பணம் முக்கால்வாசி தீர்ந்திருக்குமே. இங்கே ஏதும் மாவாட்ட நேர்ந்துவிடுமோ என்று நடுங்கிவிட்டேன்!'' என்றவளுக்கு, உடன் பிறந்தவளின் முகம் கன்றிச் சிவப்பதைக் காணவும் உள்ளூரச் சிரிப்பாக இருந்தது!

''நான் என்ன சொல்லிக் கொண்டு இருக்கிறேன்? நீ... நீயும் சுகந்தனும் எப்படி ஒன்றாக...'' என்று கடித்த பற்களுக் கிடையே தீபிகா வார்த்தைகளைத் துப்பிக் கொண்டு இருந்த



போது, அவளுடைய கும்பலில் அறிமுகமான சில பேருடன் ஓரிரு வார்த்தைகள் பேசிவிட்டு, சுகந்தன் அங்கே வந்து சேர்ந்தான்.

''என்ன தரங்கிணி, நீயும் என்னை அம்போ என்று விட்டுவிட்டு வந்துவிட்டாயே!'' என்று குறைப்பட்டான்!

''அப்படியில்லை, சுகந்த்! கண் மேக்கப் பற்றித் தீபுவுக்கு ஒரு சின்ன யோசனை சொல்ல வேண்டியிருந்தது! பாருங் கள், அவள் உடை மிகவும் அழகாக இல்லை?'' என்று, விழி களை அகலமாக விரித்து, அவனைப் பார்த்தாள் தரங்கிணி!

சுகந்தனும், தான் வெறும் அதிர்ஷ்டத்தில் சம்பாதிக் கிறவன் இல்லை என்று, அப்போது காட்டினான்!

## 4



தொழிலில் கெட்டிக்காரனாக, நிறைய சம்பாதித்த போதும், தங்கை தீபிகாவிடம், அவன் பெட்டிப் பாம்பாய் அடங்கிக் கிடப்பது, தரங்கிணிக்குத் தெரியும்!

அவள் கோபப்படுவாளே என்று, இங்கே வரவே தயங்கினானே! ஆனால், சும்மா இருந்து பயனில்லை என் பதால்தான் ஒரு வழியாக வந்தான்!

இப்போதும், அவன் பின்னடித்து விடுவானோ என்று சிறு அச்சத்துடன்தான், தரங்கிணி தன் சீண்டலைத் தொடங்கியது!

ஆனால், தன் உள்ளத்தைக் கவர்ந்த தீபிகாவை மீண்டும் பெற, வேறு வழியில்லை என்று தெரிந்ததாலேயே, சுகந்தனும், அந்தச் சீண்டலைத் தொடர்ந்தான்.

This memorandum contains advisory, consultative and deliberative material and is intended only for the person(s) named as recipient(s).

தீபிகாவை ஒரு தரம் பார்த்து, "மிகவும் நன்றாக இருக்கிறது! என்றவன், உடனே தரங்கிணியிடம் பார்வையைத் திருப்பி, "நான் முதலிலேயே சொன்ன மாதிரி, உன் உடையும், மிகவும் பிரமாதம், தரங்கிணி! அதில் உள்ள கற்களுக்குப் போட்டியாக, உன் கண்ணும் பளிச் பளிச்சென்கிறதா? ரொம்ப நன்றாக இருக்கிறது!" என்று வர்ணித்தான்!

தங்கை கொதிநிலைக்குப் போய்க் கொண்டிருந்ததை உள்ளூர ரசித்தபடி, "இதற்குப் பெயர் 'குந்தன்' வேலைப்பாடு, சுகந்த்..." என்று தரங்கிணி சொல்லிக் கொண்டிருக்கும் போதே, அவள் பேச்சில், தீபிகா குறுக்கிட்டாள்.

"சுகன் துணிக்கடை வைக்கிறபோது, இந்த விவரம் எல்லாம் கற்றுக் கொள்ளலாம்! இப்போது, அவர் பங்குச் சந்தையில் புலி! அனாவசியப் பேச்சால், அவரைப் போரடிக்காதே!" என்றுரைத்து சுகந்தனை நெருங்கி "சுகன் என்னோடு வாருங்கள். உங்களோடு கொஞ்சம் பேசவேண்டும்" என்று அழைத்தாள்.

குரலில் இனிமை சொட்டியது! ஆனால், இனிமைக்குச் சம்பந்தமே இல்லாத மாதிரி, அவளது கண்கள் பளபளப்பதைச் சுகந்தனும் கண்டுவிட்டபடியால், "நான்... தரங்கிணியோடு வந்தேன்! அவளைத் தனியாக விட்டுவிட்டு எப்படி வருவது?" என்று தயங்கினான்.

தீபிகாவின் கண்களில், இப்போது தீப்பொறி பறந்தது!

"அதைத்தான் நானும் கேட்கிறேன்! நீங்கள் எப்படி அவளோடு வரலாம்?" என்று கேட்டபோது, சூழ்நிலை மறந்து, அவளது குரல் உயர்ந்தது!



எல்லோரும் அதற்குள் இசைக்குச் சரியாக ஆடத் தொடங்கியிருந்தாலும், அருகே நின்று கொண்டிருந்த ஒரு சிலர் திரும்பிப் பார்த்தனர்!

அதைச் சாக்கிட்டு, "ஷ்!" என்றாள் தரங்கிணி. "மற்றவர்களுக்கு இனாமாக டிவி தொடர் காட்டத் தேவையில்லை! இங்கிருந்து கத்தாதே! அப்படி,ஏதாவது முக்கியமாகப் பேச வேண்டும் என்றால், இருவருமாகக் காபி ஷாப்புக்குப் போய், ஒரு காபியோ, குளிர்பானமோ அருந்துகிற பாவனையில், அங்கே உட்கார்ந்து பேசுங்கள்!" என்று ஐடியாக் கொடுத்தாள்!

"அதை, நீ ஒன்றும் சொல்லத் தேவையில்லை!" என்று, சுருக்கெனப் பேசியபோதும், தன் பட்டாம்பூச்சி நட்பினர் முன், குடும்பப் பிரச்சனைகளைக் காட்டிக் கொள்ளத் தீபிகாவுக்கும் மனசில்லை!

சட்டெனக் கையை நீட்டி, சுகந்தனின் கையைப் பற்றி இழுத்தபடி, வேகமாக அங்கிருந்து, வெளியேறினாள் அவள்! செல்லுமுன், "யாராவது என்னைத் தேடினால், எங்கிருக்கிறேன் என்று சொல்லு!" என்று தமக்கையிடம், முகம்பாராமலே சொல்லிவிட்டுப் போனாள்!

மிகச் சிறந்த 'டிஜே' என்று தீபிகா சொன்னது சரிதான் என்பது போல, இதமாகக் காதில் விழுந்த இசை, உடம்பில் ஒரு லயத்தை உண்டு பண்ண, அதற்கேற்ப உள்ளே ஆடியவர்களைப் பார்த்தபடி, மிதப்பது போன்ற உணர்ச்சியுடன் மெல்ல நடந்து சென்ற தரங்கிணிக்குத் தங்கையை நினைத்து உள்ளூரச் சிரிப்பு வந்தது!

சுகந்தனும், அவளும் சேர்ந்துவந்ததைக்கூடத் தீபிகாவால் பொறுக்க முடியவில்லையே! இவளால் எப்படி அவளை அடியோடு ஒதுக்க முடியும்?

This memorandum contains advisory, consultative and deliberative material and is intended only for the person(s) named as recipient(s).

இந்த வாய்ப்பைச் சுகந்தன் சரியானபடி பயன்படுத்திக் கொள்ள வேண்டுமே என்று எண்ணும்போதே, இல்லா விட்டால் இன்னொருதரம், இதே மந்திரத்தைப் பயன்படுத்த வேண்டியதுதான் என்று, புன்னகையோடு எண்ணினாள் தரங்கிணி.

''ஜோக் என்ன என்று சொன்னால், மற்றவர்களும் சேர்ந்து சிரிக்கலாம்!'' என்று, அருகிலிருந்து ஓர் ஆண்குரல் கேட்கவும், அவள் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தாள்.

அவள் பின்னோடேயே வந்திருப்பான் போலும்!

அறிமுகமானவன் அல்ல! பெண்களுக்குள் சற்று உயர மான அவளே, விழி உயர்த்திப் பார்க்கும் அளவுக்கு உயரம்!

கூடச் சேர்ந்து சிரிக்கத் தயார் என்பது போலப் புன்னகை யோடு அவளைப் பார்த்துக் கொண்டிருந்தான் அந்தப் புதியவன்.

டிஸ்கோவுக்கு வந்ததினாலேயே, அறிமுகமற்ற எந்த அன்னியனோடும், அவள் இலகுவாகக் கலந்து பேசுவாள் என்று எண்ணினானா?

''அது பிறருடன் பகிர்வதற்கானது அல்ல! எனக்கு மட்டுமேயானது!'' என்றவாறு நகர்ந்தாள் அவள்.

கூடவே நடந்தபடி, ''தனியே நின்று, தனக்குத்தானே சிரிக் கிறவர்களுக்குத் தனியாக ஒரு பெயர் உண்டு!'' என்றான் அவன் இலகுவாகவே!

''அறியாத அடுத்தவர்களின் சொந்த விஷயங்களில், அழைப்பில்லாமல் மூக்கை நுழைப்பவர்களுக்குக் கூடத் தனிப்பட்ட ஒரு பெயர் உண்டுதான்!'' என்று, அவனுக்குத் திருப்பிக் கொடுத்துவிட்டு, அந்தப் பெரிய ஹாலின்



ஓரமாகக் கிடந்த மேஜைகளில் அவர்களுக்காக முன் பதிவு செய்யப்பட்ட ஒன்றின் முன் அமர்ந்தாள் தரங்கிணி.

ஆனால், அவனும் பின்னோடேயே வந்து, அவளுக்கு எதிரேயே அமரவும், தரங்கிணிக்கு எரிச்சல் வந்தது. ஒன்றும் தெரியாத பாமரனைப் போல, அநாகரீகமாக நடந்து கொள்கிறானே!

''மிஸ்டர், இது முன்பதிவு செய்யப்பட்ட இடம்! எழுந்து வேறே எங்கேயாவது போங்கள்!'' என்றாள், எரிச்சலை மறையாத குரலில்.

புருவம் உயர்த்தி, விழி மலர்த்தி, ஆச்சரியத்தைக் காட்டினான் அவன்! ''என்ன வேடிக்கை பாருங்கள்! நானும், இதையேதான் உங்களுக்குச் சொல்வதாக இருந்தேன்!''

தரங்கிணிக்கு ஏனோ உள்ளே பதறியது! அப்படி யானால்...

அவளது கேளாத கேள்விக்குப் பதிலாக, ''இந்த மேஜை களை முன் பதிவு செய்தவனே நான்தான்!'' என்று சொன் னவன், ''என் பெயர் நிகிலன்!'' என்று, முறுவலோடு தன்னைத் தானே அறிமுகம் செய்து கொண்டான்.

ஐயோ! இந்தப் பேச்சும், சிரிப்பும்!

இவனிடமிருந்து தீபிகாவை மீட்பது கடினமாகிவிடுமோ?

இவனோடு சுகந்தனைத் தீபிகா ஒத்திடத் தொடங் கினால்... ஏணி வைத்தால்கூடச் சுகந்தனால் எட்ட முடியாதே!

அவள் யோசிக்கையில், அவன் ஆர்வமாகப் பேசினான்.

''நீ பேசியதைப் பார்த்தால், நீயும், தீபிகாவுடைய சினேகிதிகளுள் ஒருத்தி என்று தோன்றுகிறது! ஆனால்,

This memorandum contains advisory, consultative and deliberative material and is intended only for the person(s) named as recipient(s).

உன்னை நான் இதுவரை பார்த்தது இல்லையே! பார்த்திருந்தால், காலம் காலத்திற்கும் நிச்சயமாக மறந்திராது!"

ஜஸ்!

அவன் சொன்ன அதே காலம் காலமாக, இதே வசனத்தை எத்தனை ஆண்கள் பயன்படுத்தியிருப்பார்கள்! இதில் உச்சி குளிர்ந்து, உருகிவிட, அவளை முட்டாள் என்று எண்ணினான் போலும்!

"இல்லை. பார்த்தது இல்லை!" என்று அரைக் கவனம் போலப் பதிலுரைத்துவிட்டுத் தரங்கிணி எழுந்து நடக்கலானாள்.

அவசரமாக எழுந்து,மேஜையைச் சுற்றிக் கொண்டு, வேகமான காலடிகளுடன் அவள் அருகே சென்றான் நிகிலன்.

"ஹலோ, என்ன உன் பெயரைச் சொல்லவில்லையே! அதை அறிய, ஒரு துப்பறிவாளரைப் பிடிக்க வேண்டுமா?" என்று இலகுவாகவே கேட்டபடி, கூட நடந்தான்!

"அவ்வளவு சிரமம் ஏன்? நீபிகாவைக் கேட்டால் சொல்லிவிட்டுப் போகிறாள்!"

"அதாவது, நீயாகச் சொல்வது பிடிக்கவில்லை! ஏன்? என்னைப் பற்றி யாரேனும் தவறாகச் சொன்னார்களா? என்னைப் பற்றி ஒன்றுமே தெரியாமல், அடுத்தவர் சொல்லை வைத்து மதிப்பிடுவது சரியில்லாமலும் போகலாமே!"

கண்ணை மறைத்து விழுந்த கூந்தலை, ஓர் அலட்சியமான தலைச் சிலுப்பில் பின்னே தள்ளிவிட்டு, "நீங்கள் என் தந்தையிடம் பணிபுரிந்தது எனக்குத் தெரியும்!" என்றாள் அவள்.



வேலை செய்து சம்பாதிப்பதைத் தரங்கிணி குறைவாக எண்ணுவது இல்லை என்றாலும், அப்போது பணியைப் பற்றி அவள் சொன்னது வேண்டும் என்றுதான்! அவர்களை விடத் தாழ்வான நிலையில் நிகிலன் இருந்ததை நினைவுறுத்தத்தான்!

புரிந்து கொண்டவன் போல, நிகிலனின் கண்கள் லேசாக இடுங்கின!

அவளைச் சற்று வெறித்துவிட்டு, "நீ மகேசவரனுடைய மூத்த மகளாகத்தான் இருக்க வேண்டும்! அந்தக் குணம் அப்படியே தெரிகிறதே! என்னைப் பற்றியும், அவர்தான் சொல்லியிருக்க வேண்டும்!" என்றான் அவன்.

அவனது குறிப்பை உணர்ந்து, "அப்பாவுக்கும் உங்களுக்கும் ஒத்துப் போகவில்லை என்றார்!" என்றாள் அவள்.

"ஏன் என்று சொன்னாரா?"

"ஓரளவுக்கு."

"அவருக்கு வசதியாகச் சொல்லியிருப்பார்!"

"உங்களுக்கு வசதியாக நீங்களும் சொல்லலாமே!"

"எதற்கு? உங்கள் தந்தை சொன்னதை விட்டு, என் பேச்சை நீங்கள் நம்பப் போவது இல்லை. வீணாக விளக்குவானேன்?"

"ஒருவேளை, ஒத்துக் கொள்ளக் கூடிய காரணங்கள், உங்களிடம் இல்லையோ, என்னவோ?"

"கேட்கிற ஆளுக்குப் புரியாமல் போய்விடுமோ என்ற தயக்கமாகவும் இருக்கலாம்!"

"சொல்லிப் பார்த்தால், தானாகத் தெரிந்துவிடுகிறது!"

This memorandum contains advisory, consultative and deliberative material and is intended only for the person(s) named as recipient(s).

"சொல்வானேன்? 'கருணா'வில், தேவையான நீயணைப்புக் கருவிகள் போதாது, தேவையான காற்றுக்கு வழி கிடையாது, தொழிலாளர் பாதுகாப்புக்கான ஏற்பாடுகள் போதாது என்பது, ஒரு தரம் அங்கேயே போய்ப் பார்த்தாலே தெரியுமே! எங்கள் கருத்து வேறுபாட்டுக்கு முதல் காரணம் அதுதான்! அது, ஒத்துக்கொள்ளக் கூடிய காரணம் அல்லவா?"

"தெரியாது! நான் அந்தத் தொழிற்சாலைக்குப் போய்ப் பார்த்தது இல்லையே!" என்று தரங்கிணி உண்மையைத்தான் சொன்னாள்.

ஆனால், "ஆமாமாம்! அது எதற்கு வீணாக அங்கெல்லாம் போய்ப் பார்ப்பது? லாபமாக ஏராளமான பணம் வந்தால் போதாதா? அதை ஈட்டித் தருகிற தொழிலாளர்கள் என்னமாய் நாசமானாலும் அதைப்பற்றி, உங்களுக்கு என்னம்மா வந்தது?" என்றான் அவன் எகத்தாளமாக.

"அப்பாவின் லாபக் கணக்கு பற்றி எனக்குத் தெரியாது" என்றாள் அவள் சுருக்கமாக.

"அதுவும் சரிதான்! கைச்செலவுக்கு நிறையப் பணம் கிடைக்கிறபோது, அதைப் பற்றியும்தான், நீ ஏன் கவலைப் பட வேண்டும்?"

ஏக வசனமாக, மரியாதையும் குறைந்திருந்தது!

"'கருணா'வில் இருந்து நான் எந்தப் பணமும் பெற்றுக் கொள்வது இல்லை!" என்றாள் அவள் எரிச்சலோடு.

இதுவும் உண்மைதான்!

ஆனால், நிகிலன் இதையும் நம்பவில்லை!



அவன் புருவங்களை உயர்த்திய விதத்தில் மேலும் ஆத்திரமுற்று, "ஆனால், அதைப்பற்றி யாருக்கும், முக்கியமாக உங்களுக்கு எந்த விதமான விளக்கமும், நான் சொல்லத் தேவையுமில்லை!" என்றாள் தரங்கிணி மிடுக்காக!

ஒருகணம், நிகிலனின் கண்கள் சீற்றத்தில் ஜொலித்தன! மறுகணமே, இமைகளால் அதை மறைத்துத் தோளைக் குலுக்கினான் அவன். "அப்படியே, உன் அப்பாவின் வாரிசு!" என்றான் சிலாகிப்பது போல!

அவன் மட்டம் தட்டுவதை உணர்ந்தபோதும், அதைக் காட்டிக் கொள்ளாமல், "மிக்க நன்றி!" என்றாள் தரங்கிணி, இனிய குரலில்!

"ஆனால், உன் சகோதரிக்கு நேர் மாறாக இருப்பாய் போல! அவள் மனதை மறையாது முகத்தில் காட்டுகிறவள்! என்னோடு சிங்கப்பூருக்கு வருகிறாள், தெரியுமா?" என்று கேட்டான் நிகிலன்.

வேண்டுமென்றே, அவளைச் சீண்டி விடுகிற கேள்வி! சீறி எழுந்து, அவனோடு சண்டையிடத் தூண்டுவது!

அமைதி கலையாத பாவனையுடன், "சொன்னாளே!" என்றாள் தரங்கிணி, ஆடுகிறவர்களைக் கவனித்தபடி!

"நீ தடுக்க முயன்றிருப்பாய்!"

"அப்படியா?" என்று கதை கேட்டாள் தரங்கிணி.

"அப்படித்தான் இருக்கும்! ஆனால், அதில் பயனிராது! சட்டப்படியும், அவளது விருப்பம் போலத் தீபிகா நடந்து கொள்வதை, யாராலும் தடுக்க முடியாது! அருமை அக்கா, உன்னாலும்கூட!"

This memorandum contains advisory, consultative and deliberative material and is intended only for the person(s) named as recipient(s).

உள்ளூரக் கலக்கம்தான். ஆனாலும், சுகந்தனும், அவளுமாக வந்தபோது, தங்கையின் முகம் மாறிய விதத்தில் பிடிவாதமாக நம்பிக்கை வைத்து, ''அப்படி ஒன்றும் நிச்சயமில்லை!'' என்றாள் தரங்கிணி, அவனது பேச்சைப் பெரிதாகக் கருதாதவள் போல!

''என்ன பந்தயம்?''

''எ... எதற்குப் பந்தயம்?''

''தீபிகா என்னோடு வருவாள் என்று, நான் எவ்வளவு வேண்டுமானாலும் பந்தயம் கட்டுவேன்! ஒரு லட்சம்? இரண்டு? மறுத்து, நீ எவ்வளவு வைப்பாய்?''

''சே! அசிங்கம்! இன்னதில்தான் பந்தயம் கட்டுவது என்று இல்லையா?''

''ஒன்றில் நமக்கு உறுதி இருப்பதை எடுத்துக் காட்டுவது தான், பந்தயம் வைப்பது! இதில், என்ன விஷயம் என்று என்ன பாகுபாடு?''

''பாகுபாடு புரிவதற்கு, உங்களுக்கும் ஒரு தங்கை இருந்து, இதுபோல யாராவது பேசியிருக்க வேண்டும்!'' என்று அவள் வெறுப்புடன் கூறுகையில், சட்டென அவன் முகம் கனன்றது.

ஆனால், தரங்கிணி கூர்ந்து கவனிக்குமுன் திரும்பி, ''தீபிகா எங்கே?'' என்று சுற்றுமுற்றும் பார்த்தான் நிகிலன்.

தரங்கிணிக்குச் சொல்ல விருப்பம் இல்லைதான்! ஆனால், முழுசாக மறைக்கக் கூடிய விஷயம் அல்ல என்பதால், ''காபி ஷாப்பில்!'' என்றாள் சுருக்கமாக.

''எனக்காகக் காத்திருந்து காத்திருந்து போரடிப்பதாக போனில் சொன்னாள்! இங்கே போரடித்து, அங்கே



காத்திருக்கிறாளா?'' என்றபடி காபி ஷாப் பக்கமாகத் திரும்பினான் அவன்.

இவனைத் தடுப்பது கடினம்! ஆனால்...

விநாடியில் முடிவெடுத்து, ''நானும் கூட வருகிறேன்!'' என்றவளை சிறு வியப்புடன் நோக்கியவன், சட்டெனச் சிரித்தான்!

## 5



தங்கை இருக்கும் இடம் நோக்கி, நிகிலன் செல்லத் தொடங்கியதும், தரங்கிணியின் ஒரே எண்ணம், அவனைத் தடுத்து நிறுத்துவதாகத்தான் இருந்தது!

தீபிகாவின் கோபத்தைத் தணித்து, தன் காதலை அவளுக்குப் புரியவைப்பதில் சுகந்தன் வெற்றி பெற்றானா என்று ஒன்றும் தெரியாத நிலையில், இவனைத் தனியே அங்கே போக விடுவது உசிதமாக அவளுக்குத் தோன்றவில்லை!

சுகந்தன் முக்கால் கிணறு தாண்டிய கதையாக ஆகிவிடக் கூடாது! ஒண்டிக்கு ஒண்டியாகச் சுகந்தனால், நிகிலனை வெல்ல முடியாது.

ஆனால், தானும் கூடச் சென்றால், சமயத்துக்கு ஏற்றபடி ஏதேனும் செய்யலாம் என்ற எண்ணத்தில்தான், தானும் கூட வருவதாகத் தரங்கிணி சொன்னது!

This memorandum contains advisory, consultative and deliberative material and is intended only for the person(s) named as recipient(s).

ஆனால், நிகிலனின் வியப்பு மாறி, அவன் சிரித்த விதத்தில், ஓரளவு அவனது மனப்போக்குப் புரிய, "என்ன சிரிப்பு?" என்று சற்று எடுப்பாகவே வினவினாள்!

"எதிர்பார்த்தது நடக்கவும் சிரிப்பு வந்துவிட்டது!" என்றான் அவன் கேலியாக.

"புரியவில்லை!" என்றாள் அவள் மீண்டும் எடுப்பாகவே!

"உன் தங்கையைப் போல, நீயும் என் பின்னோடு வருவாய் என்று நான் எண்ணியது நடக்கவும்..."

"உங்கள் பின்னே நானா?" என்று அவள் கேட்ட விதமே அவனுக்கு மறுப்புரைத்தது!

"வருவதாக நீதானே சொன்னாய்? வேறென்ன காரணமாம்?"

என்ன காரணம்?

அவசரமாக யோசித்து, "எனக்கு ஒரு விஷயம் தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டும்! அப்பா பற்றி..." என்று தொடங்கினாள் தரங்கிணி.

"அதுதான் சொன்னேனே!"

"அவரிடம் ஆத்திரப்படுவதற்கு."

"ஆத்திரமா? வெறுப்பு! இந்த உலகிலேயே, நான் மிக அதிகமாக வெறுக்கிற ஆள் மிஸ்டர் மகேசுவரன்தான்!" என்றான் அவன் வெளிப்படையாக.

உள்ளூர ஏற்பட்ட அதிர்ச்சியை ஒதுக்கி, "அதுதான் ஏன் என்று புரியவில்லை!" என்றவளை இடைமறித்து, "அதற்குரிய காரணங்களையும்தான் சொன்னேனே" என்றான் அவன்.



"அ... அது போதாது! முன்னுக்கு வந்துவிட்ட நாடுகளில் கூட... தொழிற்சாலைகளில் பல்வேறு விதமாகச் செலவைக் குறைக்க முயற்சிப்பது வழக்கம்தான். எவ்வளவோ முன்னேறிய அமெரிக்கா கூட, மாசு நச்சுப்புகைக் கட்டுப்பாடு விதிமுறைகளுக்கு ஒத்துக் கொள்ளவில்லைதானே! எனவே, அதற்காக, அவரை இந்த அளவுக்கு வெறுப்பது... அவருடைய மகளின் வாழ்வையே நாசப்படுத்திப் பழி வாங்குகிற அளவுக்குப் போவது ஒத்துக் கொள்கிற மாதிரி இல்லையே!"

"இதைப் பற்றி, உன் தந்தையிடம் கேட்பதுதானே?" என்றவன் சட்டெனச் சிரித்தான்! ஏனைச் சிரிப்பு" உன்னிடம், அவர் விலாவாரியாக எப்படி விளக்கக் கூடும் என்பதை நினைத்துப் பார்க்கவே சிரிப்பாக வருகிறது!"

"ஓ! ஆனால், அவரைப் பழி வாங்குவதற்காகத்தான், தீபிகாவை நாசப்படுத்தும் முயற்சி என்று ஒத்துக் கொள்கிறீர்கள்!"

வினாடி அமைதியின் பின், "நீ எந்த நூற்றாண்டில் இருக்கிறாய்? ஓர் உல்லாசப் பயணத்தினால் யாருடைய வாழ்வும் நாசமாவது இல்லை! வேண்டுமானால், தீபிகாவையே கேட்டுப்பார்! உன்னைக் காட்டிலும், அவள் இதில் தெளிவு!" என்றான் அவன் விட்டேற்றியாக.

என்னதான் தலைக்கனம் பிடித்தவள் என்றாலும், அடி மனதில், தங்கையும் தன்னைப் போலத்தான் என்பதுதான் தரங்கிணியின் கருத்து! ஆனால், ஆத்திரம் வந்தால், அவள் என்ன செய்வாள் என்று, அவளுக்கே தெரியாது!

ஒரு வகையில், இவனும் அவளைப் போலத்தான் தெரிகிறான்! தான் நினைப்பதுதான் நியாயம் என்று, அதிலேயே பிடிவாதமாக நிற்பது!

This memorandum contains advisory, consultative and deliberative material and is intended only for the person(s) named as recipient(s).

இதற்குமேல், தான் செய்வதற்கு எதுவும் இருப்பதாகத் தரங்கிணிக்குத் தெரியவில்லை!

சுகந்தனிடம், தீபிகாவுக்குப் பிடிமானம் இருந்தால் ஒழிய...

தரங்கிணி நினைத்துக் கொண்டிருக்கும்போதே, சுகந்தனும் தீபிகாவும் டிஸ்கோ ஹாலுக்குத் திரும்பி வருவது தெரிந்தது!

''ஆனால், இதனால் மகேசுவரன் மனதில் வலிக்க அடி விழுமானால், எனக்கு மிகவும் சந்தோஷமே!'' என்று அடிக் குரலில் கூறிவிட்டு, புன்னகையோடு தீபிகாவை எதிர் கொண்டான் நிகிலன்.

தங்கையின் முகத்தில் இருந்த சிறு கலக்கம், தரங்கிணிக்கு நம்பிக்கை அளிக்கத் தொடங்கும் போதே, நிகிலன் பேசினான்! ''ஹலோ தீபிகா, உன் அக்காவும், உன்னைப் போலவே, பேரழகி என்று, நீ என்னிடம் சொல்லவே இல்லையே! அவளோடு பேசிக் கொண்டிருந்ததில், நேரம் போனதே தெரியவில்லை!'' என்றான் பாராட்டும் குரலில்!

தீபிகாவின் முகத்தில் எள்ளும், கொள்ளும் வெடிப்பதைக் கண்ட தரங்கிணிக்கு, நிகிலன் மனோ தத்துவம் பயின்றவனோ என்று தோன்றியது! தீபிகாவை அழகாச் சீண்டி விட்டுவிட்டானே!

தன்னைத் தவிர இன்னொருத்தியை அழகி என்று, தீபிகா ஒத்துக் கொண்டதே கிடையாது! அதுவும் இப்போது...

அவள் அஞ்சியது போலவே, தீபிகா தமக்கையைப் பார்வையால் கூறுபோட்டாள்!



''என்ன தீபிகா, இவ்வளவு நேரமாக ஆளே காணாமல் போய்விட்டாய்! நல்லவேளையாகப் பேச்சுத் துணைக்குத் தரங்கிணி இருந்தாள். ''அவளும் சுவாரசியமாகப் பேசுகிறாள்! ஆனாலும், என்னோடு சேர்ந்து ஆடுவதற்குச் சரியான ஜோடி நீதானே? டிஜே அடுத்ததைத் தொடங்கப் போகிறார்! ஆடுவோமா? அல்லது நாம் நாலு பேருமாகச் சேர்ந்து அமர்ந்து பேசிக் கொண்டிருப்போமா? என்ன தரங்கிணி, நீ என்ன சொல்லுகிறாய்?'' என்று என்னவோ, அவளது அபிப்பிராயம் முக்கியம் போலக் கேட்டான் நிகிலன்.

தங்கையின் ஆத்திரத்தை விட, நிகிலன் அவளை ஆட அழைத்ததும் சுகந்தனின் முகம் மாறிய விதத்தில்தான், தரங்கிணி பயந்து போனாள்!

கிட்டத்தட்டக் கொதிநிலையில் இருந்தான் அவன், 'வருவது வரட்டும்' என்று, நிகிலனை அடித்து வீழ்த்திவிடும் கடுப்பில் அவன் இருப்பது, நன்றாகவே தெரிந்தது!

நிகிலனை வீழ்த்துவது இருக்கட்டும், அவனை ஓர் ஐந்து நிமிஷம், தன்னால் தாக்குப் பிடிக்க முடியுமா என்று, அவன் எண்ணிப் பார்த்தது போலவே தெரியவில்லை!

பலப் பரீட்சையில் நிகிலனிடம் தோற்று விழுந்தால், அதன் பிறகு, தீபிகா அவனைத் திரும்பிப் பார்ப்பாளா என்றும் அவன் யோசிக்கவில்லையே!

சண்டைக் கோழியைப் போல நின்ற சுகந்தனின் பார்வை புரிந்ததும், தரங்கிணி அவசரமாக அவனிடம் சென்றாள். ''சுகன், எனக்குத் தலை ரொம்பவும் வலிக்கிறது! வீட்டுக்குப் போய், ஏதாவது மாத்திரையைப் போட்டுக் கொண்டு தூங்கினால்தான் சரியாகும்! என்னை உடனே வீட்டுக்குக்

This memorandum contains advisory, consultative and deliberative material and is intended only for the person(s) named as recipient(s).

கூட்டிப் போகிறீர்களா? இப்போதே!'' என்று சிறு கெஞ்சலில் தொடங்கி, வற்புறுத்தலில் முடித்தாள்.

தீபிகாவைப் பார்த்தபடி ஒரு கணம் தயங்கினாலும், ''ஐயோ! ம்ம்...'' என்று தரங்கிணி தலையைப் பிடித்து முனகவும், சுகந்தன் வேறு வழியின்றி, ''பிறகு பார்ப்போம்'' என்று பொதுப்படையாகச் சொல்லிவிட்டுத் தரங்கிணியோடு வெளிப்புறமாக நடந்தான்.

நிகிலனின் கண்களில் இருந்த கிண்டல் உறுத்தினாலும், தீபிகாவின் பார்வையில் இருந்த தீ ஓரளவுக்குத் திருப்தியளிக்க, வெறுமனே கையாட்டிவிட்டுத் தரங்கிணியும் கிளம்பினாள்.

கார் செல்லத் தொடங்கியதும், ''அவனை அடித்துத் துவைத்திருப்பேன்! கெடுத்துத் தப்பிக்க வைத்துவிட்டாய்!'' என்றான் சுகந்தன் எரிச்சலோடு!

அவன் துவைப்பதோடு நில்லாமல், பிழிந்து காயவும் போட்டிருப்பான் என்று நினைத்ததைச் சொல்லாமல், வலியை வெளிக்காட்டும் பாவனையில், முனகியவாறு நெற்றிப் பொட்டைக் கையால் அழுத்திவிட்டாள் அவள்!

அப்போதைக்குச் சும்மா இருந்தாலும், மறுநாள் காலையிலேயே போன் பண்ணி, அதே வசனத்தை அவன் பேசவும், ''பாருங்கள் சுகந்தன், எனக்குத் தலைவலி மண்ணாங்கட்டி ஒன்றும் இல்லை! ஆனால், அந்த இடத்தில் நம் வில்லனோடு தகராறு பண்ணியிருந்தீர்கள் என்றால், பொது இடத்தில், சிநேகிதிகள் முன்னிலையில் ரசாபாசம் பண்ணினீர்கள் என்று, தீபு உங்களை அடியோடு வெறுத்து ஒதுக்கியிருப்பாளே! அத்தோடு, அந்த நிகிலனும் பலசாலியாகத்



தான் தெரிகிறார்! அவர் ஜெயித்து, நீங்கள் தோற்றால்? இதெல்லாம் பற்றியும் கொஞ்சம் யோசித்துப் பார்த்துவிட்டுப் பேசுங்கள்!'' என்று அவள் சொன்ன பிறகுதான், சுகந்தன் வாயை மூடினான்.

ஆனால், அப்போதும், ''என்ன, நீயும் அவன் பக்கம் பேசுகிறாய்? உனக்கும் அவனைப் பிடித்துப் போய்விட்டதா?'' என்று புலம்பல் குரலில் குற்றம் சாட்டினான் அவன்.

''என்னது?!'' என்று சற்றே அதிர்ந்து, ''உளராதீர்கள், சுகந்தன்! எனக்கு அந்த ஆளை அடியோடு பிடிக்கவில்லைதான்! அதற்காக நடப்பை மாற்றிச் சொல்ல முடியுமா?'' என்றாள் அவள் சற்று அதட்டலாகவே.

''அதில்லை தரங்கிணி, எனக்குத் தீபு பற்றி, ஒரே கவலை! ஒரே தவிப்பு அவளை, அந்தப் பயலிடம் இருந்து மீட்டாக வேண்டுமே என்றுதான்...''

மனம் இளகி, ''நம் எல்லோரின் ஆசையும் அதுதானே, சுகந்தன்! கவலைப்படாதீர்கள், தீபு அந்த அளவு முட்டாள் இல்ல! நீங்கள் கொஞ்சம் பொறுமையோடு இருங்கள்! எல்லாம் சரியாகிவிடும்!'' என்று அவனை ஓரளவுக்குத் தேற்றிவிட்டு, ''எனக்கு வேலை இருக்கிறது, சுகந்தன்! வைக்கட்டுமா? பை!'' என்று பேச்சை முடித்தாள் அவள்!

ஆனால், அடுத்து நேரிலேயே வந்து நின்ற தங்கையை, இந்த அளவுக்கு எளிதாகத் தரங்கிணியால் விலக்க முடியவில்லை!

அன்றைக்குக் கற்றுக் கொடுக்க வேண்டிய 'நர்சரி ரைமை' இசையோடு சொல்லிப் பார்த்தபடி, துப்பட்டாவைச் சரியாக மடித்து அணிந்து கொண்டிருந்தபோது, கதவைக்கூடத் தட்டாமல், தீபிகா வந்து நின்றாள்.

This memorandum contains advisory, consultative and deliberative material and is intended only for the person(s) named as recipient(s).

சிவந்திருந்த முகத்தை ஓரக்கண்ணால் பார்த்துவிட்டு, "பாட்டி விழிக்கிற நேரம் ஆகிறது! போய்ப்பார்! ஆனால், அறைக் கதவைத் தட்டிவிட்டுப் போ! இங்கே வந்த மாதிரி பண்ணாதே! என்னைப் போலவே, பாட்டிக்கும் பிடிக்காது!" என்றாள் தரங்கிணி.

"இது எனக்கும் தாத்தா வீடுதான்! நீ இங்கேயே வசிக்கலாம். நான் மட்டும் உள்ளே வருவதற்கு, அனுமதி கேட்டுக் கொண்டு வரவேண்டுமோ?" என்றாள் தங்கை ஆத்திரத்தோடு!

"ஒரே வீட்டில் வசித்தாலும்கூட..." என்று தொடங்கி விட்டுத் தோளைக் குலுக்கினாள் தரங்கிணி!

சமூக நாகரீகம் தெரியாதவள் அல்ல, தீபிகா. தூங்குகிற மாதிரி நடிக்கிறவளை எப்படி எழுப்புவது? என்ன சொன்னாலும், எதிர்மறைப் பேச்சிலேயே நின்று கத்துவாள்!

சுற்றி வளைத்து ஆற்றலையும், நேரத்தையும் வீணாக்க விரும்பாமல் "எனக்குப் பள்ளிக்குச் செல்ல வேண்டும். பேசிக் கொண்டிருக்க அதிக அவகாசம் இல்லை! என்ன விஷயமாக வந்திருக்கிறாய்? முதலில் அதைச் சொல்லு!" என்றாள் தமக்கை.

"ஆமாம், பெரிய பள்ளி! எம்பிஏயும், எம்சிஏயும் கற்றுக் கொடுக்கப் போகிறாய்... டாண் என்று நேரத்துக்குப் போய் நின்றாக வேண்டாமா?" என்று தங்கை ஏளனம் செய்தாள்.

தரங்கிணி பேசாமல் பையைத் தூக்கவும், அவசரமாக, "ஏ... ஏஏ ஏய், என்ன கிளம்புகிறாய்? முதலில் எனக்குப் பதில் சொல்லிவிட்டுப் போ!" என்று கத்தினாள்.

"நீ கேட்டால் தானே?"



ஆத்திரமாக முறைத்துவிட்டு, "சுகந்தன் யார் என்று தெரியும் அல்லவா? அவரோடு, உனக்கு என்ன பழக்கம்? அதுவும், அவரைத் துணையாக டிஸ்கோவுக்கு அழைத்து வரும் அளவுக்கு?" என்று அழுத்தமான குரலில் கேட்டாள் தீபிகா.

"சுகந்தன் யார், என்ன என்று, இப்போது உனக்குத்தான் தெரியவில்லை. ஏனென்றால், நேற்றும் கிட்டத்தட்ட இதேபோலத்தான் கேட்டாய்! அதே பதில்தான் இப்போதும். நீதான் அவரை விட்டாயிற்றே! அப்புறம், அவரை நான் அழைத்துவந்ததில் என்ன தப்பு? அவ்வளவுதானே? இப்படி அரைத்த மாவையே அரைக்கப் போகிறாய் என்று தெரிந்திருந்தால், நான் முதலிலேயே கிளம்பியிருப்பேன்!" என்று கைப்பையைத் தோளில் மாட்டினாள் தரங்கிணி.

"நில்லு, நில்லு!" என்று வழியை மறித்தாள் தங்கை. "இன்னும் ஒன்று கேட்க வேண்டும்! நிகிலனோடு, உனக்கு என்ன பேச்சு? அவரைப் பிடிக்கலாம் என்று ஆசையா?"

சிறு அருவருப்புடன் தங்கையைப் பார்த்தாள் தரங்கிணி. "தீபிகா நீ முதலில், உன் மனதைத் தெளிவுபடுத்திக் கொண்டு பேசு! இந்த இருவரில், நான் யாரை வளைக்க முயல்வதாகக் குற்றம் சாட்டுகிறாய்? யாரை விட்டுவிட வேண்டும் என்கிறாய்?"

"நான் நினைத்தால், இந்த இரண்டு பேருமே, உன்னைத் திரும்பிப் பாராதபடி செய்துவிடுவேன்!" என்று சீறினாள் தங்கை!

"என்ன லாபம்? நீயும்தான் இரண்டுபேரையும் சேர்த்து மணக்க முடியாதுதானே?" என்று இலகுவாகக் கேட்டவள்,

This memorandum contains advisory, consultative and deliberative material and is intended only for the person(s) named as recipient(s).

தங்கை பதில் சொல்ல முடியாமல் திணறுவதைக் கவனியாதவள் போல, "அதிருக்கட்டும், உன் சிங்கப்பூர்ப் பயணம் என்ன ஆயிற்று? எப்போது?" என்று அக்கறையோடு விசாரித்தாள்!

முந்திய கேள்விக்குப் பதில் சொல்ல முடியாமல் திற்க நேர்ந்ததற்கும் சேர்த்து, "உன்னை ஒன்றும் கூட்டிப் போகப் போவது இல்லையே... அப்புறம் அதைப் பற்றி, உனக்கு என்ன வந்தது?" என்று, பெரியவளை எடுத்தெறிந்து பேசினாள் தீபிகா!

"ஒன்றும் இல்லைதான். ஆனால், பந்தயப்பணம் ஒரு... இல்லை, உடனேயே இரண்டு மடங்காக ஆக்கினாரே - அதனால், இரண்டு லட்சம்! அதை, வசூல் பண்ண வேண்டும். அதற்காகத்தான் கேட்டேன்" என்றாள் மற்றவள் சாதுவாக.

"ப... பந்தயம் பணம்? எ... என்ன பந்தயம்?"

"அதுதான்மா! நீ சிங்கப்பூருக்கு அந்த நிகிலனோடு போவாயா, மாட்டாயா என்று... நீ கட்டாயம் வருவாய் என்று நிகிலன் சொன்னார்! நான்...."

"என்ன தைரியம்! என்னைப் பற்றிப் பந்தயம் வைக்கிற அளவுக்கு நீ நிகிலனோடு பேசினாயா?" என்று கனன்றாள் தீபிகா!

"ஐயோ! பேசியது நானில்லை! மிஸ்டர் நிகிலன்தான்! நான் மறுக்கவும், ஒரு லட்சத்தை இரண்டு மடங்காக்கினார்! அவ்வளவு நிச்சயம் அவருக்கு உன்னைப் பற்றி!"

தீபிகாவின் முகத்தில், கோபம் குமுறிக் கொண்டிருந்தது! "பந்தயமா வைக்கிறான்? இருக்கட்டும்! சரியான பாடம் கற்பிக்கிறேன்!"



ஏதோ தன்னாலானது என்று எண்ணியவாறு, "என்ன முடிவாகிறது என்று தெரிவி, தீபு! கிடைத்தால், இரண்டு லட்சம் ஆயிற்றே! பணம் வேறு தேவைப்படுகிறது! நீயும் ஒரு படம்கூட விற்றுத் தரவில்லையே!" என்றவள், "பாய்மா! இனியும் தாமதிக்க என்னால் முடியாது! நீ சொல்லும் போது, கதவைச் சாத்திவிட்டுப் போ!" என்று சொல்லிய வண்ணமே அங்கிருந்து அகன்றோடிவிட்டாள்.

இதற்கு மேல் பேசிக் கொண்டிருந்தால், தாக்கம் குறைந்து விடக் கூடும்!

## 6



தரங்கிணி எதிர்பார்த்தது போலவே, அன்று மதியமே தந்தை அழைத்தார்! தொழில் துறைப் பழக்கப்படி, 'பிசினஸ் லஞ்ச்!'

அப்பாவோடு சாப்பிடப் போவதாகப் பாட்டியிடம் தெரிவித்துவிட்டுத் தரங்கிணி சென்றாள்.

மருமகளிடம் பாட்டிக்கு வெறுப்புதான் என்றாலும், பேத்தி, அவ்வப்போது பெற்றவரோடு பேசிப் பழகுவதைத் தடுப்பது கிடையாது! மகளை எண்ணியே வயதுக்கு மீறி உடல் மிகவும் தளர்ந்துவிட்ட அந்தப் பெண்மணிக்குத் தனக்குப் பிறகு, எப்படியும் தரங்கிணிக்குத் தந்தைதானே குடும்பம் என்ற எண்ணமும் அதற்கு முக்கியமான காரணம்!

உணவு வகைக்கு ஆர்டர் எடுப்பவர் நகர்ந்ததுமே, மகளிடம் விசாரணையை மகேசுவரன் தொடங்கிவிட்டார்.

This memorandum contains advisory, consultative and deliberative material and is intended only for the person(s) named as recipient(s).

"என்ன தீபிகாவிடம் சொன்னாயா? உன் அறிவுரைக்கேனும் அவள் மதிப்புக் கொடுத்தாளா?" என்று!

தீபிகாவின் விஷயத்தில், தந்தை ரொம்பவே ஆடிப் போயிருப்பது போலத் தோன்றவும், "ஒரு விதமாகச் சொல்லியிருக்கிறேன், அப்பா! அதற்கு மேல் புத்திமதி என்று சொன்னால், தீபு கேட்கிறவள் அல்ல என்று உங்களுக்குத் தெரியாதா?" என்றாள் தரங்கிணி இதமான குரலில்.

உச்சுக் கொட்டினார் அவர். "எல்லா வேலைகளையும் முடித்து விடலாம் என்று நினைத்தேன்! அந்தப் பயல், குறுக்கே விழுந்து குட்டை குழப்பிவிட்டான்!" என்றார் வெறுப்புடன்!

நிகிலனைக் குறிப்பிடுகிறார் என்பது புரியப் பெற்றவரைக் கூர்ந்து நோக்கினாள் தரங்கிணி! கண்களைச் சுற்றிலும் கறுப்பு வளையம்! நெற்றியில் நிறையச் சுருக்கங்கள், காதோரத்தில் அதிக நரை!

எல்லாவற்றுக்கும் காரணம் நிகிலனா?

"அந்த நிகிலனுக்கும் உங்களுக்கும் இடையே, எதுவும் பெரிய தகராறாப்பா? அவர், உங்களிடம் கோபமாக இருப்பது போலத் தோன்றிற்றே?" என்று விவரம் கேட்டாள் தரங்கிணி.

"எதற்கு என்று சொன்னானா?"

"தொழிற்சாலையில் பாதுகாப்பு விதிகளைச் சரியாகக் கடைபிடிக்கவில்லை என்று, ஏதோ காரணம் சொன்னார்! ஆனால், முழுக்க அதுமட்டுமே காரணம் இல்லை என்று எனக்குத் தோன்றியது!"

மகளிடம் ஒரு பார்வையைச் செலுத்திவிட்டுக் கையில் இருந்த சூப்பை அருந்துவதில் கவனத்தைச் செலுத்தினார் மகேசுவரன்.



ஒன்றுமே பேசாமல், மகள் பதிலுக்காகக் காத்திருப்பதைக் காட்டிக் கொள்ளவும், "ஒரு சமயத்தில், நம் நிறுவனத்தின் முக்கியமான ஆட்களை நிறையத் தருவதாக ஆசை காட்டித் தன்னோடு கூட்டிப் போய்விட்டான். நம்மதே போலத் தொழிலைத் தொடங்கி, வளர்த்து... கொஞ்ச காலம், நாம் மிகவும் கஷ்டப்பட நேர்ந்தது!" என்றார் அவர்.

"அவர்களில் யாரும் திரும்பி வந்தார்களா?"

"இல்லை..."

"அப்படியானால், நிகிலன் ஆசை காட்டியதோடு நில்லாமல், பேசியதை கொடுத்தும் இருக்க வேண்டும்!"

மகேசுவரன் பதில் சொல்லாமல், உணவருந்துவதில் முனைந்தார்.

"ஆனால், இதில் தப்பு செய்தது அவர்தானே? ஒரு நிறுவனத்தை உடைக்க முயற்சி செய்துவிட்டு, உங்கள் மீதே கோபப்படுவது என்ன நியாயம்?"

அழகாக வெட்டி வைக்கப்பட்டிருந்த வெள்ளரித் துண்டை ஒன்றை எடுத்துச் சுவைத்து விழுங்கிவிட்டு, மகேசுவரன் பேசினார். "நிகிலன் நியாய அநியாயம் பார்க்கிறவன் என்று, உனக்கு யார் சொன்னது? ஒன்றை நினைத்துவிட்டால், நியாய அநியாயம், சரி தவறு எதுவுமே அவனைத் தடுப்பது இல்லை! இப்போது, நம்மை அழிப்பதுதான் அவனது ஒரே நோக்கம்! நம் வாடிக்கையாளர்களை வளைத்துப் பிடித்து ஒரு தரம் நிறுவனத்தைச் செயலற்றதாக ஆக்க முயன்றான்! நான் விடவில்லை! இப்போது, அடுத்த முயற்சிக்காக, தீபிகாவைக் குறி வைத்திருக்கிறான்! அவளை நாசமாக்கி, என்னைக் கேவலப்படுத்தத் திட்டம்! இந்த முட்டாள், அது

This memorandum contains advisory, consultative and deliberative material and is intended only for the person(s) named as recipient(s).

தெரியாமல், அவன் விருப்பத்துக்கு ஆடுகிறது!'' என்று, கசந்த குரலில் கூறி முடித்தார்!

சற்று யோசித்துவிட்டு, "நீங்கள் நினைக்கிற மாதிரி தீபு முட்டாள் அல்ல, அப்பா! அவள் ஏதாவது திட்டம்," என்ற வளை இடைமறித்து, ''அவன், அவளைத் திருமணமே செய்து கொள்ளவே விரும்பினால்கூட, எனக்குப் பிடிக்காது தான்! அதுவுமே, அவளது பங்குகளைப் பெற,அவனது சூழ்ச்சியாகத்தான் இருக்கும்! அதையும் வைத்துக் கொண்டு, இன்னும் கொஞ்ச காலம் சேர்த்தால், நம் அதிருப்தியாளர் களோடு சேர்ந்து, நம்மைக் கவிழ்த்து விடலாமே!'' என்றார் தந்தை! ''ஆனால், அது நடக்க நான் விடமாட்டேன்!''

''ஆனால், தீபுவை மணப்பதாக, நிகிலன் சொல்ல வில்லையே, அப்பா!''

''சொல்ல மாட்டான்! அவளாக வந்து காலடியில் விழுந் தால்தானே, அவன் அதிகாரமாகக் கேட்க முடியும்? ஆனால், நான் உயிரோடு இருக்கிறவரை அது நடக்காது. விட மாட்டேன்!''

'மகேசுவரனுக்கு அடி விழுந்தால் சந்தோஷமே' என்று நிகிலன் சொன்னது தரங்கிணிக்கு நினைவு வந்தது! பசி மறந்துவிட, உணவை அளைந்தாள்!

"நான் இருக்கிறவரை காப்பாற்றி விடுவேன்! ஆனால், அதன் பிறகு? ராஜாவை, இவன் பந்தாடி விடுவானே!''

தனக்குத் தானே பேசுகிறவர் போல மகேசுவரன் சொன் னது, தரங்கிணியைத் திடுக்கிட வைத்தது!

''என்னப்பா, அண்ணனை இவ்வளவு மட்டமாக எடை போடுகிறீர்களே!''



''இப்படி மட்டமாகவா? இதைவிட மட்டமாகச் சொல்ல முடியவில்லையே!'' என்றார் தந்தை! ''என்னை விடு! நிகி லனை நீயும் பார்த்திருக்கிறாய்! உன் அண்ணனையும் அறிவாய்! சொல்லு ராஜா எத்தனை நாள் தாக்குப் பிடிப் பான்?''

அவனைக் குறித்து, 'மூத்தது மோழை' என்று பாட்டி அடிக்கடி சொல்லுவதுண்டு! மறுக்க முடியாத வாசகம்!

சற்றுத் தயங்கிவிட்டு, ''நீங்கள் நினைக்கிற மாதிரி, உங்கள் தொழிலை அழிக்கும் நோக்கம், நிகிலனுக்கு இல்லாமலும் இருக்கலாம், அப்பா! வீணாகக் கவலைப்படுவானேன்?'' என்றாள் மகள்.

''ஏழு ஆண்டுகள்! அயராத உழைப்பின் பலனைக் கையில் வைத்துக் கொண்டு வந்திருக்கிறான்! நிச்சயமாகச் சும்மா இருக்க மாட்டான்.''

மீண்டும், அவள் இருப்பதைத் தந்தை மறந்துவிட்டாற் போலத் தோன்றவும், தரங்கிணி கவலையுடன் அவரைப் பார்த்தாள்!

அன்று வரை அவள் அறிந்தறியாத சோர்வு அவரிடம் நன்றாகவே தெரிந்தது! இது வெறும் மனக்கவலையா? அல்லது...

''என்னப்பா, உங்களுக்கு உடம்பு ஏதாவது சரி யில்லையா?'' என்று கவலையுடன் விசாரித்தாள் மகள்.

ஆனால், உடல்நிலை பற்றிய இந்த விசாரிப்பு, மகேசுவ ரனுக்கு எரிச்சலையே தந்தது!

''என்ன மாதிரி முக்கியமான விஷயம் பேசிக் கொண் டிருக்கும் போது, என்னத்தைப் போய்க் கேட்கிறாய்! நீ கூட...

This memorandum contains advisory, consultative and deliberative material and is intended only for the person(s) named as recipient(s).

ச்சு! எனக்கு உடம்புக்கு ஒன்றும் இல்லை! உன் தங்கை விஷயமாக, வேறு என்ன செய்யப் போகிறாய்? அதைச் சொல்லு!" என்று, பொறுமையற்று சிடுசிடுத்தார்.

"இதற்கு மேல், நான் செய்வதற்கு ஒன்றும் இல்லை, அப்பா!" என்று உண்மையைச் சொன்னாள் அவள்.

பெற்றவர் புருவம் சுளிக்கவும், நிலைமையை லேசாக்க எண்ணி, "ஆனால், உங்களுக்கு யாராவது பயங்கரமான அடியாள் தெரியுமானால், அவனைக் கொண்டு, அந்த நிகிலனை அடித்து விரட்ட முயற்சி பண்ணலாம்!" என்று முறுவலோடு விளம்பினாள் அவள்.

மனமில்லாத போதும், தன்னை மீறி, மகேசவரனும் முறுவலித்தார்! "பார்த்துக் கொண்டே இரு! நீ சொன்னதே நடந்தாலும் நடக்கலாம்!" என்று, தலையை ஆட்டிக் கூறினார்.

தந்தையின் இலகுவான பேச்சு, அவரது உடல்நிலையைப் பற்றிய உறுத்தலைக் குறைத்துவிட, தன் வழக்கமான உற்சாகத்துடனேயே தரங்கிணி வீடு திரும்பினாள்.

தங்கையின் பிரச்சனை தீரவில்லை. அத்தோடு, தொழிலைப் பற்றிய தந்தையின் கவலைகளும் அப்படியே இருந்த போதும் அதற்காகவெல்லாம் மனதை வாட்டி ஒரு பயனும் கிடையாது என்பது, தரங்கிணி அனுபவத்தில் அறிந்த உண்மை! அத்தோடு, அவர்கள் இருவருமே, அடுத்தவர் பேச்சை ஏற்பவர்கள் இல்லை! கூடவே, பிரச்சனைகளை, அவரவருக்கு உகந்த மாதிரி தீர்த்துக் கொள்ளும் மன உறுதி உடையவர்களும் கூட! அப்படி இருக்கையில், அவர்களுக் காகக் கவலைப்பட்டு நிம்மதியைக் கெடுத்துக் கொள்வது முட்டாள்தனம்!



மறுநாள் சனிக்கிழமை! பள்ளிக்கு விடுமுறை தினம்! தரங்கிணி, தன்னுடைய அடுத்த வேலையைத் தடையின்றிச் செய்யக் கூடிய நாள்.

விடுமுறை நாளில் செய்வதற்கு என்று ஒதுக்கி வைத்த சிறுசிறு வேலைகளை முடித்துவிட்டு, படம் வரைவதற்குத் தேவையான பொருட்கள் அனைத்தையும் உரிய விதமாகப் பையில் அடைத்துக் கொண்டு, பாட்டியிடம் சொல்லி விட்டுத் தரங்கிணி கிளம்பிவிட்டாள்!

குழந்தைகள் பூங்கா, சமீபத்திய மழையால் பசேல் என்றிருந்தது! சிறு வயதில் இருந்து, அவள் ரசித்த பகுதியில் போய்த் தரங்கிணி தன் சாமான்களைக் கடை பரப்பினாள். மூன்று கால்களையும் வாகாக நிறுத்தி, போர்டை வைத்து, கான்வாசை மாட்டி, வரைய வேண்டிய காட்சியை மனதுள் முடிவு செய்து கொண்டு வரையத் தொடங்கினாள்.

மதியம் தொடங்குகிற நேரம் என்பதால், பூங்காவில் கூட்டம் அதிகம் இல்லை!

அங்கே பணி புரிவோருக்கு, அவள் பழக்கமானவள். எனவே, அவ்வப்போது வந்து குசலம் விசாரித்தவர்கள் தவிர, அவளுக்கு இடையூறு எதுவும் இருக்கவில்லை!

மூன்று மணி நேரத்து இடையறாத வேலையின் பின், கையோடு கொண்டு வந்திருந்த ஆப்பிளைக் கடித்துத் தின்றவாறு, படத்தின் குறை நிறைகளை ஆராயலானாள்.

பசிய மரக்கிளையில், டேபிள் டென்னிஸ் பந்து போல அமர்ந்திருந்த குஞ்சுக்குத் தேன் சிட்டு ஜோடி ஒன்று இரையூட்டுவது போலப் படம்!

This memorandum contains advisory, consultative and deliberative material and is intended only for the person(s) named as recipient(s).

சின்னப் பிள்ளைகளுக்கே உரிய பிடிவாதத்துடன், வாயை இறுக மூடிக் கொண்டு அமர்ந்திருந்த குஞ்சைப் பார்க்கையில், வரைந்த தரங்கிணிக்கே சிரிப்பு வந்தது! அவ்வளவுக்குப் படம் தத்ரூபமாக இருந்தது!

பள்ளிக் குழந்தைகளுக்கு, பதினொரு மணி இடை வேளையின் போது, சிறு தீனி கொடுக்கையில், இப்படித் தான் சில பிள்ளைகள் அடம் பிடிக்கும்! இதைக் காட்டிப் பொருத்தமாக ஏதாவது கதை சொல்லி உணவூட்டலாம்!

ரசித்துக் கொண்டிருக்கையில், இரு இளஞ்சிறார்களின் இனிமையான சிரிப்புச் சத்தம், அவளைக் கவர்ந்து, திரும்பிப் பார்க்க வைத்தது!

பார்த்தால், நாலும் ஐந்துமான வயதில், இரு சிறுமிகள், தரங்கிணியின் படத்தைச் சுட்டிக்காட்டி, அவர்களது கைகளைப் பற்றியிருந்த ஒரு நெடியவனிடம் ஏதோ கூறிச் சிரித்துக் கொண்டிருந்தனர்.

உள்ளுணர்வு எச்சரிக்கத் தயக்கத்துடன் பார்வையை உயர்த்தினால், அங்கே நின்றவன் நிகிலனேதான்!

''ஹலோ, இந்தப் பரந்த சென்னை மாநகரம் கூட, ரொம்பச் சின்னதாகிவிட்டது போல!'' என்று முறுவலித்தான் அவன்!

அந்த இடத்தில், நிகிலனைச் சந்திக்கக் கூடும் என்று தரங்கிணி சற்றும் எதிர்பார்க்கவில்லை!

நட்சத்திர ஹோட்டல், டிஸ்கோ, பெரிய ஷாப்பிங் பகுதி என்றால், அவனோடு பொருந்தக் கூடும்! ஆனால், அமைதியான இந்தப் பூங்கா?



அவளது அமைதியைக் கலைக்க, அவன் இங்கே வரவேண்டுமா?

மனதைக் காட்டிக் கொள்ளாமல், ''அப்படித்தான் தெரிகிறது!'' என்று சாதாரணமாகக் கூறியவாறு, உண்டு முடித்த பழத்தின் மையப் பகுதியைப் பாலிதீன் உறையுள் போட்டு பெரிய பையினுள் திணித்துவிட்டுத் தரங்கிணி எழுந்தாள்.

அதற்குள், அந்த இரு சிறுமிகளும் தரங்கிணிக்குப் புரியாத ஒரு மொழியில், நிகிலனிடம் ஏதோ வேகமாக வளவளத்தனர்!

ஒன்றுமே புரியாது போகவும், நிகிலனும் விழிக்கத்தான் போகிறான் என்று, ஆவலாகக் காத்திருக்கையில், அவனும் அதே மொழியில் அவர்களோடு வேகமாக உரையாடவும், தரங்கிணிதான் வியந்து விழி விரிக்கும்படி ஆயிற்று!

கிடைத்த சிறு இடைவெளியில், ''இது என்ன மொழி?'' என்று வினவினாள் அவள்.

இந்தியாவின் வட கிழக்குப் பகுதி என்று அவள் ஊகித்தது சரியாக, ''அஸ்ஸாமி!'' என்றான் அவன்.

கூடவே, அவளது வியப்பு புரிந்து, ''அங்கே சில கிளைகள் இருக்கின்றன! எனவே, பயின்றேன்!'' என்றான் நிகிலன்.

சட்டென ஒன்று தோன்றி உறுத்த, ''இவர்கள்...'' என்று இழுத்தாள் தரங்கிணி!

அவளது மனதைப் படித்தவன் போன்று உதட்டைப் பிதுக்கினான் நிகிலன். ''இவர்களுடைய தந்தை, அங்கே ஒரு தொழிலதிபர்! என் பொருட்களுக்கும் மொத்த விற்பனையாளர், இங்கே கிண்டி தொழில் பேட்டையில் அவருக்கு ஒரு வேலை. அதைச் சாக்கிட்டுக் குடும்பத்தோடு வந்திருக்கிறார்.

This memorandum contains advisory, consultative and deliberative material and is intended only for the person(s) named as recipient(s).

மனைவி, 'ஷாப்பிங்' போயிருக்கிறார். இவர்களை, நான் பார்த்துக் கொள்வதாகச் சொல்லி அழைத்து வந்தேன்! விளக்கம் போதுமல்லவா?'' என்று புருவம் உயர்த்திக் கேட்டான்.

அந்தக் கடைசிக் கேள்வியை அவன் கேளாதிருந்தால், நன்றாக இருந்திருக்கும்! அதுவும், அப்படிக் கிண்டலாக!

ஆனால், அவளும் அந்த மாதிரி, அவனுடைய பிள்ளைகளோ என்று நினைத்திருக்கக் கூடாதுதான்!

அவனுக்குப் பதில் சொல்லும் சங்கடத்தில் இருந்து, அந்தச் சிறுமிகளே, தரங்கிணியைக் காப்பாற்றினர்.

பெரியவர்களின் புரியாத பேச்சினால் பொறுமையிழந்த சிறுமியர் இருவரும், நிகிலனின் கையைப் பற்றி இழுத்து வேகமாக ஏதோ சொல்லவும் அவன் சிரித்தவாறே, ''நீ வரைந்திருக்கும் படம் மிகவும் அழகாக இருக்கிறதாம்! அதிலும், அந்தக் குஞ்சுப் பறவை, இவர்களுடைய தம்பி பாரிட்ஜ் சாப்பிட மாட்டேன் என்று பிடிவாதம் பிடிப்பது போல இருக்கிறதாம்!'' என்று மொழி பெயர்த்தான்.

செய்த தப்புக்குப் பரிகாரம் போலச் சட்டென ஓர் ஐடியா தோன்ற, ''ஒரு பத்து நிமிஷங்கள் இங்கே இருக்க முடியுமா? பென்சில் கொண்டு, இவர்களை வரைந்து கொடுக்கிறேன்!'' என்றாள் தரங்கிணி.

நிகிலன் அஸ்ஸாமியில் மொழி பெயர்த்துச் சொல்லப் பிள்ளைகள் இருவரும், உற்சாகத்துடன் தலையாட்டினர்!

நர்சரிப் பிள்ளைகளுடைய பழக்கம் இருந்ததால், அவர்களுடைய குட்டித் தம்பியைப் பற்றிய கேள்விகளை



நிகிலன் மூலமாகக் கேட்டபடியே அவர்களது தோற்றத்தைப் பென்சில் கோடுகளால், தரங்கிணி தீட்டி முடித்தாள்.

அவள் முதலில் வரைந்து வைத்திருந்த வண்ணப் படத்தின் அருகே, இந்தப் படம் மங்கிக் காணுமோ என்று ஒரு யோசனை வந்தது! சின்னப் பிள்ளைகள் ஆயிற்றே!

''என்ன?'' என்று அவன் கேட்கவும், மனதை மறையாமல் தெரிவித்தாள் அவள்.

''ஓகே!'' என்றவன், பிள்ளைகளை விளித்து, வேகமாக எதையோ சொல்ல, அவர்களும் ஆரவாரத்துடன் கேட்டு ஆர்ப்பரித்தனர்.

''என்ன சொன்னீர்கள்?''

''இவர்களை வண்ணப் படம் வரைய ஆசை! ஆனால், நேரம் இல்லாததால், பென்சில் 'ஸ்கெட்ச்' வரைந்திருப்பதாகச் சொன்னேன்!''

''அவ்வளவுதானா?'' என்று அவள் ஐயத்துடன் கேட்கவும், ''அடுத்த முறை நிறைய அவகாசத்தோடு வாருங்கள். ஆன்ட்டி வண்ணப் படமே வரைந்து தருவார்கள் என்றேன்! உருவப் படங்கள் வரையவும் தெரியும்தானே?'' என்று அவன் பதிலுக்குக் கேட்கவும், அவளுக்கு எரிச்சலோடு, சிரிப்பும் வந்தது!

அவள் விஷயத்தில், அவன் என்ன வாக்குக் கொடுப்பது என்று தோன்றினாலும், கெட்டிக்காரத்தனமாகச் சமாளித்திருக்கிறான் என்றும் தோன்றியது!

இன்னொரு முறை, இவர்களை எங்கே சந்திப்பது? எங்கே வரைவது?

புன்னகையோடு, இருவரின் படங்களையும் அவரவர் கையில் கொடுத்தாள்!

பென்சிலில் வரைந்தாலும், கறுப்பு வெள்ளை புகைப் படம் போலத் தோற்றம் தெளிவாக அமைந்திருந்தது!

இரு பெண்களுக்குமே, அதில் மிகுந்த சந்தோஷம்! ஒருவருக்கொருவர் ஒத்திட்டுப் பார்த்து ரசிக்க, தரங்கிணி அதைப் பார்த்து ரசித்தாள்.

"அதிசயமான பெண் நீ! மிஸ்டர் மகேசவரனுடைய மகள் என்றால் நம்பவும் முடியவில்லை! நம்பாதிருக்கவும் முடிய வில்லை!" என்று புரியாத தலையசைப்புடன் கூறினான் நிகிலன்.

"ஏன்? மகேசவரனுடைய மகள் படம் வரையக் கூடாதா?" என்று எரிச்சலுடன் வினவினாள் அவள்!

"வரையலாம்! விற்கலாம், சம்பாதிக்கலாம்! ஆனால், எந்த விதமான லாபமும் இல்லாமல், அறியாத இரு சிறுமிகளுக்கு வரைந்து கொடுத்து மகிழ்வதுதான் புரியாத புதிராக இருக்கிறது!" என்றான் அவன்.

உண்மையைச் சொல்ல வாயெடுத்துவிட்டு, "ஒருவேளை உங்களைக் கடன்பட வைப்பதற்காக இருக்கலாம்" என்றாள் அவள், பூடகமாக!

"கடன்பட வைத்து? பதிலாக, நீ விரும்புவதைச் செய் வேன் என்றா? அதுபோன்ற பெரிய மனிதத்தனம் எல்லாம் எனக்குக் கிடையாது என்று, உனக்கே இதற்குள் தெரிந் திருக்குமே! குறைந்த பட்சமாக, உன் தந்தையேனும் சொல்லியிருப்பாரே!" என்றான் அவன் ஏளனமாக!

தரங்கிணி திகைத்தாள்!



7



சொன்னார்தான்! நிகிலன் நியாய அநியாயங்கள் அற்ற மனிதன் என்று, மகேசவரன் தெளிவாகவே சொல்லியிருக் கிறார்! அதற்கு நிருபணமும் இருக்கிறது!

ஆனால், இரண்டு சின்னப் பிள்ளைகளோடு, அவர்களுக்குச் சரியாக இனிமையாகப் பேசியவாறு அவன் வரவும், எல்லாம் மறந்து விட்டதே!

அந்த நினைவே இல்லாமல், இவ்வளவு நேரமும், மிகவும் உற்சாகமாக அல்லவா கழிந்தது! என்ன மடத்தனம்!

உதட்டைக் கடித்துக் கொண்டு அவள் திரும்புகையில், சிறுமியர் இருவரும், கோட், சூட் அணிந்த ஒருவரிடம் படங்களைக் காட்டி, நிறையப் பேசுவது தெரிந்தது!

"காயா, பாருவுடைய தந்தை!" என்று நிகிலன் சொல்லிக் கொண்டிருக்கும் போதே, அவர் மகள்களோடு வேகமாக வந்து, தரங்கிணிக்கு நன்றி தெரிவித்தார்!

நிகிலன் இருவரையும், ஒருவருக்கொருவர் அறிமுகம் செய்து வைத்தான்.

திரு சந்தோஷ் பருவா நல்ல ஆங்கிலம் பேசவே, உரையாடுவது இலகுவாக இருந்தது!

படங்களை வரைந்து கொடுத்ததற்காக அவர் ரொம்பவே நன்றி சொன்னார். இந்தச் சென்னைப் பயணத்தை, அவருடைய மகள்களுக்கு மறக்க முடியாததாகத் தரங்கிணி



This memorandum contains advisory, consultative and deliberative material and is intended only for the person(s) named as recipient(s).

ஆக்கிவிட்டாளாம்! பத்திரப் படுத்தி வைத்து, எத்தனை யெத்தனை காலமோ, பார்த்துப் பார்த்து மகிழப் போகிறார்களாம்! அப்படியொரு சந்தோஷத்தை, அவருடைய குடும்பத்துக்கு அவள் கொடுத்துவிட்டாளாம்!

அவரது வெளிப்படையான புகழ்ச்சியில் கூச்சமடைந்து, அவருடைய அழகான பெண்களை வரைய முடிந்தது, தனக்கு கிடைத்த ஆனந்தமான அனுபவம், அதற்காக நன்றி சொல்ல வேண்டியவள் தானேதான் என்று தரங்கிணி கூற, சித்திரக்கலை போலவே, பேச்சிலும் வல்லவளாக, அழகாகப் பேசுகிறாள் என்று மீண்டும் புகழ்ந்தார் பருவா!

அதில் சந்தேகமே கிடையாது என்று கண்ணில் சிரிப்புடன் நிகிலன் ஒத்துப்பாடிய விதத்தில் தரங்கிணிக்கே சிரிப்பு வந்தது!

முத்தாய்ப்பாக, அவளைத் தங்களோடு டீ அருந்த வருமாறு பருவா அழைத்தார்.

அக்ரெலிக் ட்யூப்கள், பிரஷ்கள் முதலியவற்றை உரிய விதமாகப் பைக்குள் வைத்துவிட்டதைப் பார்த்துவிட்டு, அவர் கேட்டபோது, இன்றைய வேலை இன்னும் முடியவில்லை என்று சாக்குச் சொல்ல, அவளால் முடியாது போயிற்று!

ஆனால், அவர்களோடு சென்று, நிகிலன் இருக்கும் இடத்தில் இன்னும் ஏறத்தாழ ஒரு மணி நேரத்தைக் கழிப்பதும் அவளுக்குச் சரியாகப் படவில்லை!

எனவே, ''இல்லை... வீட்டுக்குப் போக வேண்டும். பாட்டி தேடுவார்கள். இன்னொரு முறை பார்ப்போமே!'' என்று இதமாக மறுக்க முயன்றாள், அவள்.



ஆனால், ''பாட்டிக்கு போன் செய்து சொல்லிவிடலாமே! நாளைக்கு முடியாது! நாங்க திருப்பதிக்குப் போகிறோம்! அப்படியே, புட்டபர்த்தி, தர்மஸ்தலா, சிருங்கேரி, கொல்லூர் என்று ஒரு வாரம் கோயில்கள் சுற்றுலா! அப்புறம் திரும்பி வந்து, உடனேயே அஸ்ஸாமுக்குக் கிளம்புவதால், பிறகு நேரம் இருக்குமோ என்னவோ? அதனால், இப்போதே வாருங்களேன்! நீங்கள் வராவிட்டால், பிள்ளைகளுக்கும், எனக்கும் மிகவும் வருத்தமாக இருக்கும், மேடம்!''என்று கெஞ்சுதலாகவே வற்புறுத்தினார் அவர்!

அதற்குள், அந்தச் சிறுமியரும் விஷயம் புரிந்து, ''யெஸ், கம், ஆன்ட்டி!'' என்று கொஞ்சுதலாக அழைத்தனர்!

தரங்கிணி தயங்குகையில், நிகிலன் குறுக்கிட்டு, ''உங்கள் காரை எடுத்துக் கொண்டு, நீங்கள் முன்னே போங்கள், சந்தோஷ்! நான் வரும்போது காட்டினேனே, அந்த ஹோட்டலுக்குப் போங்கள். இங்கே எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு, தரங்கிணியை நான் கூட்டி வருகிறேன்!''என்று உறுதியளித்தான்.

அந்த அளவில் திருப்தியுற்று, தரங்கிணியிடம் ஒரு புன்னகையோடு, சந்தோஷ் பருவா மகள்களை அழைத்துக் கொண்டு கிளம்பினார்!

ஆத்திரத்துடன் நிகிலனை முறைத்துப் பார்த்தாள் தரங்கிணி! என்ன தைரியம் இருந்தால், அவளுக்காக அவன் முடிவெடுத்துப் பேசுவான்!

அதுவும், அவள் சொன்னதற்கு மாறாக!

ஒன்றுமே நிகழாதது போல, ''தீபிகாவிடம் என்ன சொன்னாய்?'' என்று கேட்டான் நிகிலன்.

This memorandum contains advisory, consultative and deliberative material and is intended only for the person(s) named as recipient(s).

அப்போதைக்குச் சற்றும் சம்பந்தம் இல்லாத விஷயத்தைத் திடுமென அவன் கேட்ட விதத்தில், தரங்கிணிக்குத் தூக்கி வாரிப் போட்டது!

ஆனால், பெரு முயற்சி செய்து, அவன் காணாமல் அதைச் சமாளித்துக் கொண்டு, "நாங்கள் சகோதரிகள்! எங்களுக்குள் என்னென்னவோ பேசிக் கொள்வோம்! அதைப்பற்றி, உங்களிடம் ஏன் சொல்வது?" என்றாள் கூடியவரையில் மிடுக்காக!

"அக்கா தங்கைக்குள் இருக்கக் கூடிய ஆயிரம் விஷயங்கள் பற்றி, நான் ஒன்றுமே கேட்கவில்லை, தாயே! ஆயிரத்தி ஒன்றாக, என்னைப் பற்றி, அவளிடம் என்ன சொன்னாய் என்றுதான் கேட்டேன்!" என்றான் அவன்!

ஏதோ நடந்திருக்கிறது! அதைப்பற்றித் தனிமையில் பேசி அறிந்து கொள்ளும் நோக்கத்தில்தான், தன்னை அவனே கூட்டி வருவதாகப் பருவாவிடம் சொல்லியிருக்கிறான்!

என்ன ஆகியிருக்கும்? பாடம் கற்பிக்கிறேன் என்றானே, தீபிகா! கற்பித்திருப்பானா?

நெஞ்சு படபடப்பதைக் காட்டிக் கொள்ளாமல், "என்ன கர்வம்? ஆயிரத்தியொன்றாக, உங்களைப் பற்றித்தான் பேச வேண்டும் என்பதற்கு, நீங்கள் அப்படி என்ன முக்கியம்?" என்று அலட்சியமாகக் கேட்டாள் அவள்!

"முக்கியமோ, இல்லையோ? பேசியிருக்கிறாய் என்பது நிச்சயம்! நேற்று நாங்கள் சந்திப்பதாக இருந்தது! ஆனால், அவள் வரவில்லை. காரணமும் தெரிவிக்கவில்லை! நீதான் அவள் மனதில், ஏதோ விஷம் ஏற்றிவிட்டாய் என்று எனக்கு நிச்சயம்! என்ன சொன்னாய்?"



உள்ளூரச் சுமைமயிறங்க, "அவளிடமே கேட்பதுதானே?" என்றாள் தரங்கிணி.

அவளை ஒரு தரம் நேராகப் பார்த்துவிட்டு, "நீ ஆபத்தானவள் என்று நான் நினைத்தது, சரியாகத்தான் இருக்கிறது! இப்போது, நீ படத்தை எடுத்து வைத்தாயானால், நான் இந்த ஸ்டான்டைப் பிரித்துப் பைக்குள் அடுக்குகிறேன்! மூட்டை கட்டுகிற வேலை சீக்கிரமாக நடக்கும்! அங்கே பருவா காத்துக் கொண்டிருப்பார்!" என்று, நடப்புக்கு மாறினான் நிகிலன்.

நிமிஷத்துக்குள் எவ்வளவு இலகுவாக நிறம் மாறுகிறான்!

அது மட்டுமல்ல! என்னவோ, அந்த பருவா குடும்பத்தோடு உ சாப்பிட, அவனோடு அவள் செல்வது முடிவான விஷயம் என்பது போலப் பேசுகிறானே!

அப்படித் தோன்ற வேண்டும் என்பதற்காகத்தான், தீபிகா பற்றிப் பேசிக் குழப்பினானா? அவளது விவகாரம் பற்றி அறிவதற்காகவேனும், மறுப்பின்றிக் கூட வருவாள் என்ற எண்ணமா?

ஒன்றை நினைத்துவிட்டால் சரி, தவறு பார்க்க மாட்டான் என்று தந்தை சொன்னது நினைவு வந்தது!

தலையைச் சிலுப்பி, "வருவதாக நான் மிஸ்டர் பருவாவிடம் சொல்லவே இல்லையே, மிஸ்டர் நிகிலன்!" என்றாள் அவள் எடுப்பாக!

மீண்டும் அவளைக் கூர்ந்து நோக்கிவிட்டு, "பருவா சொன்னதைக் கேட்டாய், அல்லவா? நீ வராவிட்டால், மிகவும் வருத்தப்படுவார் என்றாரே! அதனால்..." என்றவனை இடையிட்டு, "அது, வெறும் வாய் உபசாரமாகச் சொன்னது!" என்றாள் அவள்.

ஆனால், சொல்லும்போதே, அப்படியில்லை என்று உள்ளூரத் தோன்றிவிட, அதற்கேற்பக் குரலும் மெலிந்து போயிற்று!

அவனும் அதை உணர்ந்து, "இப்போது வாய் வார்த்தையாகப் பேசுவது நீதான் என்று, உனக்கே தெரியும்! அவரது பேச்சு, உள் மனதிலிருந்து வந்தது! நன்றி தெரிவிக்க விரும்புகிற மனிதரை, வீணே வருத்துவானேன்? நீ இல்லாமல் போனால், என்னைத்தான் என்ன எண்ணுவார்கள்? தயவுபண்ணி வா!" என்று, நயந்தே கூப்பிட்டான்.

பருவாவைப் பொருத்த வரையில், அவளுக்கும் கிட்டத்தட்ட அதே எண்ணம்தான்.

ஆனால், அவனுக்கு விட்டுக் கொடுப்பது போல இருக்கக் கூடாது, என்று நினைத்து, 'அவருக்காகவும், அந்தப் பிள்ளைகளுக்காகவும் வருகிறேன்! ஆனால், இன்னொரு தரம் எனக்காக முடிவெடுத்து ஏதாவது பேசினீர்கள் என்றால், உங்களைப் பற்றி யார் என்ன நினைத்தாலும் பரவாயில்லை என்று, எழுந்து போய்க் கொண்டே இருப்பேன்! நிற்க மாட்டேன்!" என்றாள் அவள் கறார்க் குரலில்!

தோளைக் குலுக்கியது தவிர, அவனிடம் பெரிய மாற்றம் இல்லை!

"நீ ஆபத்தானவள் என்று நான் நினைத்தது, நூறு சதவீதம் சரி என்று தெரிகிறது!" என்று மட்டும் சொல்லிவிட்டு, அவளது பொருட்களைப் பைக்குள் சீராக அடுக்குவதில் முனைந்தான் அவன்!

திரு பருவாவின் முன்னிலையில், நிகிலன் தவறான பொருள்படும்படியாக எதையும் பேசினான் என்று சொல்ல



முடியாது! ஆனால், அவளது தேவைகளைக் கவனித்து, அவன் விரைந்து செயலாற்றிய விதம், பருவாவைத் தவறாக எண்ண வைத்திருக்கும் என்பதிலும், ஐயமில்லை!

ஆனால், அவள் உட்காருவதற்காக நாற்காலியை நகர்த்தி வைத்ததையோ, கட்லட்டுக்காக சாஸை அவள் புறமாக தள்ளி வைத்ததையோ, லேசாகச் செருமுகையில் தண்ணீரைத் தூக்கிக் கொடுத்ததையோ தப்பென்று குற்றம் சொல்ல முடியுமா?

தந்தை சொன்னது போல, நிகிலன் அபாயகரமானவன்தான், முடிந்தவரை, அவனை விட்டு விலகியிருப்பது தான் அவளுக்கு நல்லது!

பாதிச் சிற்றுண்டி முடியும் போதே, திருமதி பருவாவும் வந்து சேர்ந்தாள். அறிமுகங்கள் முடிந்து, படங்களைக் காட்டி, குழந்தைகளின் பரபரப்பு அமர்ந்த பிறகு, நீலிமா தன் 'ஷாப்பிங்' பற்றிச் சொன்னாள்.

"பட்டுச் சேலைகள் மட்டும் வாங்கவில்லை! நல்ல பட்டு எங்கெங்கே கிடைக்கும் என்று சரியாகத் தெரியவில்லை! நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள், நிகில்?" என்று வினவினாள் அவள்.

"பட்டுச் சேலை பற்றிக் கட்டைப் பிரம்மச்சாரி, எனக்கு என்ன தெரியும், நீலிமா? பெண்கள் என்றால்..." என்று, தரங்கிணியைப் பார்த்து இழுத்தான் நிகிலன்.

அதாவது, இவளுக்குத் தெரியும், கூட்டிப் போவாள் என்று நேரடியாகக் குறிப்பிட்டுச் சொல்லிவிடவில்லையாம்! எனவே, அவளது எச்சரிக்கையை மீறவும் இல்லையாம்!

கோபத்தோடு, சிரிப்பும் வந்தது தரங்கிணிக்கு!

This memorandum contains advisory, consultative and deliberative material and is intended only for the person(s) named as recipient(s).

இதற்கு மேல் சும்மா இருப்பது அநாகரீகம் என்று உணர்ந்து, "அரசின் கோ ஆப்டெக்ஸ், இன்னும் சில தனி யார் கடைகளில், நல்ல பட்டுச் சேலைகள் கிடைக்கும்! ஆனால், எனக்குப் பள்ளி வேலைகள் இருப்பதால், வார நாட்களில் மதியத்துக்கு மேல்தான் எனக்கு வர முடியும். பரவாயில்லையா? அதைவிட, மிஸ்டர் நிகிலனிடம் கடை களின் அடையாளம் சொல்லி விட்டால், அவரே கூட்டிப் போய்விடுவாரே!" என்று அவனை மாட்டி வைத்தாள் தரங்கிணி.

"நான் கூட்டிப் போய்விடுவேன்! ஆனால், சேலையைத் தேர்ந்தெடுக்க, யாராவது பெண் துணைதானே, பயனாக இருக்கும்? அதனால்..." என்று மீண்டும் இழுத்தவாறே, தரங்கிணியைப் பார்த்தான் அவன்.

அதே திரிசமன்! சொல்லாமல் சொல்லி மாட்டிவைப்பது!

"நிச்சயமாய்! நாலு நிறுசுப் புதுப் பட்டுச் சேலைகளைப் பார்ப்பது, எனக்கும் பரவசம்தான்! ஆனால், இந்த நர்சரிப் பள்ளிகள் நடத்துவது பற்றிப் புதுப்புது அரசு ஆணைகள் எல்லாம் வந்திருக்கிறதா? நினைத்த நேரத்தில் வந்து சோதனை போடுகிறார்கள்! நான் அங்கேயே இருந்து கவனிக்க வேண்டியிருக்கிறது..."

"சோதிக்க வரும் அதிகாரிகளையா?" என்று அக்கறை யோடு கேட்டான் நிகிலன்! "இப்படியா? அல்லது இப்படியா?" என்று அடிப்பது போலவும், ரூபாய் நோட்டுகளை எண் ணுவது போலவும் சாது முகத்துடன் அவன் சைகை செய்ய வும், பெரியவர்கள் எல்லோருக்கும் சிரிப்பு வந்தது!

தரங்கிணிக்கும்தான்.



ஆனால், உடனேயே அடக்கிக் கொண்டு, "இரண்டும் இல்லை! முறையான அனுமதிகள் வாங்கி வைத்திருப்ப தால், உங்களுக்குப் பழக்கமான மாதிரியான கவனிப்புகள் எதுவும் எனக்குத் தேவைப்பட்டது இல்லை, நிகிலன்!" என்று அவள் தெளிவாக விளக்கவும், "உங்களுக்கு வேண்டும், நிகிலன்!" என்று சொல்லிச் சிரித்தாள் நீலிமா!

சற்று நேரம் இப்படிக் கலகலப்பாக நேரம் கழிகையில், தற்செயலாகக் கைக் கடிகாரம் கண்ணில் படவும், தூக்கி வாரிப் போட, தரங்கிணி அவசரமாக எழுந்தாள்!

இவ்வளவு நேரம், எப்படி ஓடிப் போயிற்று?

## 8



நிகிலன், அவனுடைய நண்பர்களிடமிருந்து கிளம்புவ தற்குத் தரங்கிணி வெகு கணக்காக, நேரம் நிர்ணயித் திருந்தாள்! வீடு போய்ச் சேரும் வரைக்கும் கணக்கிட்டிருந் தாள்!

அதுவரை, அவன் இருப்பதைச் சகித்துக் கொள்ள வேண் டும் என்று எண்ணியவளுக்குக் கணக்கிட்டிருந்த மொத்த நேரம், பேச்சு சுவாரசியத்தில், அவள் அறியாமலே கழிந்தது. கொஞ்சம் அதிர்ச்சியாகக் கூட இருந்தது!

"ஐயோ, பாட்டி தேடுவார்கள்! டீக்கு அரை மணி நேரம், வீடு போய்ச்சேர அரை மணி நேரம் என்று சுமார் ஒரு மணி நேரத்தில் வருவதாகச் சொல்லியிருந்தேன். கிளம்புகிறேன்!"

This memorandum contains advisory, consultative and deliberative material and is intended only for the person(s) named as recipient(s).

என்று அவள் அவசரமாக எழவும், அதற்குமேல் தடை சொல்லாமல் பருவா குடும்பம் அவளுக்கு விடையளித்தது.

ஆனால், நிகிலன் கூடவே எழுந்து, அவளை வீட்டில் கொண்டுபோய் விட்டுவிடுவதாகக் கூறவும், வேண்டாம் என்று தரங்கிணி தடுத்தாள்.

ஹோட்டல் வளாகத்திலேயே டாக்சி இருக்கிறது! வெளியே போனால், எத்தனையோ ஆட்டோ ரிக்ஷாக்கள்! அவளுக்காகத் தன் விருந்தினர்களை விட்டு, அவன் வரத் தேவையே இல்லை என்றாள் அவள்.

''அப்படியில்லை... நானும் கிளம்பிக் கொண்டுதான் இருக்கிறேன்'' என்று நிகிலன் மறுத்துக் கொண்டிருக்கும் போதே, ''நிகிலனின் கார் இருக்க, நீங்கள் மற்றதில் போவானேன்? எங்களுக்காகப் பார்க்கிறீர்களா? வேண்டாம். நீங்கள் கிளம்புங்கள், நிகிலன். நாம் பிறகு சந்திப்போம்!'' என்று பருவா அவனிடம் விடைபெறவும், அதற்கு மேல், தரங்கிணியால் ஒன்றும் தடுத்துச் சொல்ல முடியாது போயிற்று!

வீட்டை அடைந்ததும், தரங்கிணியின் சற்றுக் கனமான பையைத் தூக்கி வரும் சாக்கில், நிகிலன் வீட்டுக்குள் வந்ததையும்தான்!

அங்கே அவள் தடுத்தும், அவன் கேட்பதாக இல்லை.

அந்த நேரம், பொதுவாகப் பாட்டி தங்கம்மா, அவளது அறைக்கு வெளியே இருக்கிற நேரம்! உடல் ஒடுங்கிவிட்ட போதும், வெளிக் காற்றுக்காகச் சக்கர நாற்காலியில் உட்கார்ந்து, தோட்டத்தைச் சுற்றி அழைத்துப் போவார்கள்!

உடம்பு கொஞ்சம் நன்றாக இருக்கிறபோது, நர்சின் துணையோடு, சற்று நடப்பது உண்டு!



அன்று, அப்படி நடந்துவிட்டு, ஓய்வாக ஹாலில் உட்கார்ந்திருக்கிற நாளாக இருந்தது!

எனவே, நிகிலனைப் பாட்டியிடம், தரங்கிணி அறிமுகம் செய்விக்க வேண்டியிருந்தது!

''அப்பாவிடம் வேலை செய்துவிட்டு, அவரிடம் தகராறு செய்து வெளியேறியவர்!'' என்று அவனை மட்டம் தட்டும் நோக்கத்தில்தான், தரங்கிணி விளக்கம் சொன்னாள். ஆனால், அதுவே, அந்த வீட்டில், நிகிலனுக்குச் சாதகமாக அமைந்து போனது!

''உன் அப்பாவிடம் சண்டை போட்டானா? பிள்ளை, கெட்டிக்காரன் போல இருக்கிறதே!'' என்று தங்கம்மா பாராட்டிக் கூறவும், தரங்கிணிக்குத் தன் தலையிலேயே அடித்துக் கொள்ளலாம் போல இருந்தது!

மருமகளிடம், பாட்டிக்குள்ள வெறுப்பை, அவள் எப்படி மறந்தாள்?

நிகிலன் வேறு, அவளைப் பார்த்துப் புரிந்தவன் போலச் சிரிக்கவும், அவளுக்குத்தான் முகம் சூடாகிச் சிவந்து போயிற்று!

அதற்குமேல், பலநாள் பழகியவன் போலப் பாட்டியோடு, நிகிலன் பேசத் தொடங்கிவிட்டுப் பாட்டியின் விருப்பப்படி, அவனுக்குக் காபி, சிற்றுண்டி உபசாரம் செய்ய வேண்டியிருந்தது!

அதைத் தவிர்க்க, ''இப்போதுதான் பாட்டி, சாப்பிட்டோம்!'' என்று சொல்லிவிட்டுப் பாட்டியின் குறுகுறு பார்வையில், அவள் மீண்டும் முகம் சிவந்தாள்!

This memorandum contains advisory, consultative and deliberative material and is intended only for the person(s) named as recipient(s).

"அவருடைய நண்பருடைய பிள்ளைகளைப் படம் வரைந்து..." என்று தொடங்கிவிட்டு, இந்த விளக்கத்தின் பயனற்ற தன்மையை உணர்ந்து, அவள் வாயை மூடிக் கொண்டாள்.

ஆனால், நிகிலன் விடுவானா?

"சும்மா சொல்லக் கூடாது, பாட்டி! தரங்கிணி எவ்வளவு அழகாக வரைகிறாள், தெரியுமா? மகள்களைத் தரங்கிணி வரைந்து கொடுத்ததைப் பார்த்துப் பிரமித்துப் போனார், என் நண்பர்! நன்றி தெரிவித்தே ஆக வேண்டும் என்று, எங்களைக் கட்டாயமாக ஹோட்டலுக்கு அழைத்துப் போய் விட்டார்! பிள்ளைகளை, விளையாடும் இடத்துக்கு அனுப்பி விட்டுப் பேசிக்கொண்டே இருந்தோமா, நேரம் போனதே தெரியாமல் போய்விட்டது! அருமைப் பேத்தியைக் காணோம் என்று பயந்துபோய் விட்டீர்களா, பாட்டி?" என்று அடிக்கொரு 'பாட்டி' போட்டு, வெகு இயல்பாக விளக்கம் கூறினான், நிகிலன்!

நடந்ததைத்தான் சொன்னான்! ஆனால், இருவருக்கும் நல்ல பழக்கம் உண்டு என்பது போலத் தோன்றும்படி அவன் பேசியதுதான், தரங்கிணிக்கு ஆத்திரமூட்டியது!

ஆனால், இதை என்னவென்று மறுப்பது?

நிகிலனின் கண்களில் இருந்த ஒளி, இப்போதும், அவளது மனநிலையை அவன் அறிந்தே இருந்தான் என்பதைக் காட்டவும், உள்ளூரக் குமுறினாள் அவள்.

சட்டென யோசித்து, "சும்மா ஒரு பார்ட்டியில் பார்த்த பிறகு, இன்றுதான், மிஸ்டர் நிகிலனை மீண்டும் சந்தித்திருக்கிறேன், பாட்டி! ஆனால், இவரோடு வந்த அந்த இரண்டு



சிறுமிகளும், அவர்களுடைய பெற்றோரும் பழகிய விதத்தில், நேரம் போனதே தெரியவில்லை!" என்று வியந்தாள்!

இவன் ஒன்றும் அதிக நாள் பழகியவன் அல்ல என்பதைப் பாட்டிக்கு, அடிக்கோடிட்டுக் காட்டிவிட்ட திருப்தி தரங்கிணிக்கு!

முறுவலித்து, "சில பேரை முதல் முறை பார்க்கும் போதே, அன்னியமாகத் தெரிவது இல்லை! அன்று பார்ட்டியிலேயே நாங்கள் நிறையப் பேசினோம்! அந்த வகையில், நீங்களும், உங்கள் பேத்தியும் ஒரே ரகம், பாட்டி!" என்று, அவன் இலகுவாக ஐஸ் வைத்தான்!

தங்கம்மாவுக்கு, அந்தப் பேச்சும் பிடித்துப்போயிற்று!

"ரொம்பச் சரியாகச் சொன்னாயப்பா! சின்னப்பிள்ளைகள் கூட, எங்கள் தருக் கன்னம்மாவோடு ஒட்டிக் கொள்வார்கள், தெரியுமா? ஆனால், அந்த வகையில், நீயும் அவளைப் போலவேதான் இருக்கிறாய்! உன்னையும், வேற்று மனிதனாக எனக்குத் தோன்றவே இல்லை! இதை, உன் உறவு வீடாக நினைத்து, எப்போது வேண்டுமானாலும் வந்து போப்பா! இனி, நான் படுக்கப் போக வேண்டும்... நம் உடம்பு பலம் அவ்வளவுதான்!" என்று முதியவள் நாக்குச் சைகை காட்டவும், கனவானாக நிகிலனும் அதற்குமேல் உட்கார்ந்திராமல் கிளம்பிவிட்டான்.

சக்கர நாற்காலியில் ஏறப் பாட்டிக்கு உதவும் சாக்கில், தரங்கிணி அங்கேயே நின்று விட்டாள்.

அலட்டாத வேக நடையுடன் நிகிலன் செல்வதைப் பார்த்துவிட்டு, "தரும்மா, நீ அந்த மாதிரி மகனை வேண்டாம் என்றாயே, அப்போதே இந்தப் பையனைத் தெரியுமா?"

This memorandum contains advisory, consultative and deliberative material and is intended only for the person(s) named as recipient(s).

என்று தங்கம்மா கேட்கவும், தரங்கிணி அதிர்ச்சியுற்றுத் திரும்பினாள்!

"அவரை இரண்டாம் முறையாக, இன்றுதான் சந்தித்ததாகச் சொன்னேனே, பாட்டி! நீங்கள் கவனிக்கவில்லையா?" என்று திகைப்புடன் வினவினாள்!

"சொன்னாய்... ஆனால், இதுபோல விஷயங்களில், காரணமின்றி மறைத்துப் பேசத் தோன்றும்! உன் அம்மா கூட, அப்படித்தான் ஏமாந்தாள்! அதனால்தான், எதற்கும் இருக்கட்டும் என்று, கேட்டேன்! அதற்காக வருத்தப்பட்டுக் கொள்ளாதே, செல்லம்!" என்று, சிறு வேதனையுடன் உரைத்துவிட்டுத் தன்னறைக்குச் சென்றாள் தங்கம்மா!

எல்லாம், அந்த நிகிலனால் வந்தது!

என்னவோ, இருவரும் அடிக்கடிச் சந்தித்து அளவளாவுவது போலத் தோன்றும்படி, அது என்ன பேச்சு? இனிமேல் எப்போதும், பாட்டியின் மனதில் இந்தச் சந்தேகம், தலையை நீட்டிக் கொண்டே இருக்கப் போகிறது! மகள் நினைவில் கவலைப்பட்டுக் கொண்டும் இருக்கப் போகிறார்கள்!

என்ன அநியாயம்!

இருக்கட்டும்! இனி, இந்தப் பக்கமே வரவே வேண்டாம் என்று சொல்லிவிட வேண்டும்!

இத்தனையிலும், ஒரு சந்தோஷம்! ஏற்கெனவே திட்டமிட்டிருந்தபடி நிகிலனைச் சந்திக்கத் தீபிகா செல்லவில்லை! செல்லாததன் காரணத்தையும் சொல்லவில்லை!

அதாவது, அவனை ஒதுக்குகிறாள்!

இப்படியே முழுதாக விலகிவிட்டால் நன்றாக இருக்கும்!



ஆனால், தீபிகாவைப் பொறுத்தவரையில், கடைசி வினாடி வரை, எதுவும் உறுதியில்லை!

எனவே, இன்னமும் கொஞ்ச காலம், இவளிடம் முறுக்கிக் கொள்வது கூடாது! பொறுமையோடுதான் இருக்க வேண்டும்!

அவளது தீர்மானத்தைச் சோதிப்பது போல, மறுநாள் காலையிலேயே நிகிலன் டெலிபோன் செய்தான்!

அவனுக்குத் தீபிகாவின் தனிப்பட்ட போன் எண் வேண்டுமாம் அவளோடு, தனியாகப் பேச வேண்டுமாம்!

என்ன திண்ணக்கம் இருந்தால், அவளிடமே, அவன் இப்படிக் கேட்பான்?

'அடப்போடா' என்று சொல்லும் ஆசையை அடக்கிக் கொண்டு, "சிங்கப்பூர் வரைக் கூட வருகிறதாக இருந்தவள், டெலிபோன் எண்ணைத் தராமலா இருந்தாள்?' என்று ஆச்சரியாக வியந்தாள்.

"குரலில் இன்னும் ஒரு பத்து சதவீதம் குறைவாக ஆச்சரியத்தைக் காட்டியிருந்தால், உண்மைபோலக் கூடத் தோன்றியிருக்கும்!" என்றான் அவன்.

தரங்கிணி உதட்டைக் கடித்துக் கொள்ள, அவன் தொடர்ந்து, "செல் நம்பர் ஒன்று கொடுத்திருந்தாள்தான். ஆனால், நீ அன்று என்ன சொன்னாயோ, செல்லை 'ஆஃப்' பண்ணி வைத்துவிட்டாள் போலத் தெரிகிறது! அல்லது, 'சிம் கார்டை'த் தூக்கிப் போட்டுவிட்டாளோ, என்னவோ? அந்த வீட்டுக்குள் சென்று,அவளோடு பேசுவது கடினம்! அதனால் தான், வீட்டு டெலிபோன் எண்ணைக் கேட்கிறேன்!" என்று கோவையாக இயம்பினான் நிகிலன்!

This memorandum contains advisory, consultative and deliberative material and is intended only for the person(s) named as recipient(s).

என்னவோ உறுத்தியது, தரங்கிணிக்கு!

இதைக் கண்டுபிடிக்க, அவன் எதற்கு?

முகவரியைச் சொல்லிக் கேட்டால், 'எக்ஸ்சேஞ்சில் டெலிபோன் எண்ணைத் தெரிவித்துவிடப் போகிறார்கள்! இல்லாவிட்டாலும், தீபிகா செல்லும் கடைகள், 'பியூட்டி பார்லர்' போன்ற இடங்கள் அவனுக்குத் தெரியாமல் இராது! அத்தோடு, தரங்கிணி அவனுக்கு உதவுவாள் என்றுதான், நிகிலனுக்கு என்ன நிச்சயம்? எதிர்மறைச் செயல்தானே இயல்பு?

அவனிடமே கேட்டாள், "தீபிகா விஷயத்தில், உங்களைப் பற்றிய என் அபிப்பிராயம் உங்களுக்குத் தெரியும்! அப்படியிருக்க, அவளது எண்ணைத் தருவேன் என்று, எப்படி எதிர்பார்த்தீர்கள்?"

"எதிர்பார்க்கவில்லையே!"

"பின்னே? பின்னே ஏன் என்னிடம் கேட்டீர்கள்?"

குரலில் நகையுடன் அவன் சொன்னான். "இவ்வளவு புத்திசாலியாக யோசிப்பாய் என்றும் எதிர்பார்க்கவில்லை!" என்றான் மெச்சுதலாக.

பாராட்டில் குளிர்ந்துவிடாமல், "கேட்டது கிடைக்காது என்று தெரிந்தும், ஏன் கேட்டீர்கள் என்பதை இன்னும் சொல்லவில்லை!"என்று, தரங்கிணி அதிலேயே நின்றாள்.

"பிடிவாதமும் அதிகம்! கோபப்பட மாட்டாய் என்றால், உண்மையைச் சொல்லி விடுகிறேன். வெளியூருக்குச் செல்லுமுன், உன் குரலைக் கேட்க வேண்டும் போல இருந்தது! உன்னிடம் பேசுவதற்கு, ஏதாவது காரணம் காட்ட வேண்டும் அல்லவா?"



தீ சுட்டாற்போல, டெலிபோன் கருவியைக் கீழே போட்டாள் தரங்கிணி!

அப்போதும், அவனது சிரிப்புச் சத்தம் கேட்பது போல ஓர் உணர்வு!

அடுத்து செல் ஒலித்தபோது, தயக்கத்துடன்தான், கூப்பிட்டவர் எண்ணைக் கவனித்தாள்.

தந்தை!

இன்னொரு விதமான தயக்கத்துடன் அவள் "என்னப்பா?" என்றபோது, "ஒரு சந்தோஷமான சமாச்சாரம், தரங்கிணி! தீபு, சுகந்தனை மணக்க ஒப்புக் கொண்டு விட்டாள்! ஞாயிறன்று நிச்சயதார்த்தம்! முக்கியமானவர்களைக் கூட்டி நடத்தப் போகிறோம்! சுகந்தனுடைய பெற்றோர் வந்து, எல்லோருமாகப் பேசி முடித்துவிட்டு, இப்போதுதான் போகிறார்கள்! கொடுத்த வேலையைக் கெட்டிக்காரத்தனமாகச் செய்து முடித்திருக்கிறாய்! குட்!" என்றார் மகேசுவரன்!

தரங்கிணிக்கு சந்தோஷமாக இருந்தது! ஆனால், பெற்றவர் நினைப்பது போல, அவளால் மட்டுமே இது நடக்கவில்லையே!

"நான் ஒன்றும் பெரிதாகச் செய்துவிடவில்லை, அப்பா! தீபுவுக்கே, சுகந்தனிடம்தான் உண்மையான அன்பு! ஒரு சின்னத் தூண்டுதலில், இடையில் வந்த அசட்டு மயக்கத்தை மீறிக் கொண்டு,அன்பு வெளிப்பட்டுவிட்டது! அவ்வளவு தான்!" என்றாள் பெண்!

ஆனால், மகளின் பேச்சு மகேசுவரனுக்குப் பிடிக்கவில்லை!

"அப்படியானால், சொல்லுகிற நான் என்ன முட்டாளா? ஒருவர் பாராட்டினால்,அதை நல்லபடியாக ஏற்கப்

This memorandum contains advisory, consultative and deliberative material and is intended only for the person(s) named as recipient(s).

பழகிக்கொள்!'' என்று சிடுசிடுத்தார் அவர்! தொடர்ந்து, ''ஞாயிற்றுக்கிழமை, சற்று சீக்கிரமாகவே வந்துவிடு! அலங்காரம் என்ற பெயரில், தீபிகா, முகத்தை அலங்கோலம் பண்ணிவிடாமல் பார்த்துக் கொள்! கூடவே, பாட்டியிடம் ஒரு வார்த்தை போட்டுவை! வை!'' என்றவர், பதிலுக்கு அவள் எதுவும் சொல்லும் முன்னதாகவே, செல்லை அணைத்துவிட்டார்!

அவரது பழக்கம் அதுதான்! அவரது வேலை முடிந்தால், அதற்குப்பிறகு, 'வைக்கட்டுமா, வைத்துவிடு' என்றெல்லாம் சொல்லிக் கொண்டு இருக்கமாட்டார்! எதற்கு நேரத்தையும் பணத்தையும் வீணாக்குவது என்கிற கருத்து! அந்த ஓரிரண்டு வார்த்தைகள், உறவை வளர்க்குமே என்ற எண்ணமே கிடையாது!

தீபிகாவுக்கு போன் செய்து வாழ்த்தலாமா என்று யோசித்து விட்டு, அந்த எண்ணத்தைக் கைவிட்டாள் தரங்கிணி.

தந்தை சொல்லித் தமக்கை வந்தாளோ என்ற சந்தேகம் தீபிகாவுக்கு ஏற்கெனவே உண்டு! அப்படியில்லை என்பது போலத் தரங்கிணி தோன்ற வைத்திருந்தாள். இப்போது, தந்தை மூலமாகத் தகவல் தெரிந்தது எனும் போது,பழைய சந்தேகம் தங்கைக்கு உறுதிப்பட்டு விடக் கூடும்! அப்புறம், மீண்டும் வேதாளம் முறுங்க மரத்தில் ஏறினால், ஆச்சரியப்படுவதற்கில்லை!

எதற்கு வம்பு?

தங்கையே விவரம் சொல்லட்டும் என்று தரங்கிணி காத்திருக்கலானாள்.

அதிக நேரம் காத்திருக்க நேராமல் விரைவிலேயே தீபிகாவின் குரல் சந்தோஷச் செய்தியைச் சொன்னது!



அவளது பேச்சில் பெரும்பான்மைப் பகுதி, சுகந்தன் அவளுக்குப் பரிசளித்த வைர செட்டைப் பற்றிய வர்ணனையாக இருந்தது கூடத் தரங்கிணிக்குச் சிரிப்பாகத்தான் இருந்தது!

நிச்சயத்தின் போது, ஒட்டு முடி வைத்து, நீளச் சடை பின்னிப் பட்டுச் சேலையும், ஒட்டியாணமுமாகத்தான் இருப்பேன் என்று, எல்லோரையும் ஆச்சரியப்படுத்தினாள் தீபிகா!

பொருத்தமான அலங்காரத்துடன், அழகே உருவாகத் தங்கை நிற்பதைக் கண்டு தரங்கிணி பெருமைப்பட்டாள்!

அண்ணன் மனைவி மாலா, பார்லரில் அலங்காரத்தை முடித்துக் கொண்டு வரத் தாமதம் ஆனது தவிர, வேறு எந்தவிதமான பிரச்னையும் இல்லாமல், திருமண நிச்சயம் நல்லபடியாக நடைபெற்றது!

'அக்கா இருக்கத் தங்கைக்கு முதலில் கல்யாணமா? என்ன...'என்று கிசுகிசுத்த ஓரிருவர்கூடத் தரங்கிணியின் முகத்தில் விகசித்த மகிழ்ச்சியைப் பார்த்து அடங்கிப் போயினர்!

வைபவம் நன்கு நடந்தேறியது!

விழா ஏற்பாடுகளை முழுமையாகக் கவனித்ததால் மகேசுவரன் களைத்தாற்போலத் தோன்றினார்.

அதேசமயம், வேலை எதையும் செய்யாமல், பார்லரில் அலங்காரத்தை முடித்துக் கொண்டு, மேடையில் காட்சி மட்டுமே கொடுத்துக் கொண்டு நின்ற, அண்ணனையும், அண்ணன் மனைவியையும் பார்க்கையில், தரங்கிணிக்கு எரிச்சல்தான் வந்தது!

This memorandum contains advisory, consultative and deliberative material and is intended only for the person(s) named as recipient(s).

ஆனால், அதிக நேரம் எரிச்சல்பட்டுக் கொண்டிருக்க முடியாமல், அடுத்த விருந்தினரை வரவேற்க, அவள் ஓட வேண்டியதாயிற்று!

வெளியூருக்குச் சென்ற நிகிலனுக்கு, இந்தத் திருமண நிச்சயம் பற்றித் தெரியுமோ, என்னவோ என்று, தரங்கிணிக்கு ஒரு தரம் யோசனை ஓடிற்று!

''அக்கா, இந்தப் பக்கம் மாட்டல் சரிந்துவிட்டது. சீர் செய்துவிடு!'' என்று தீபிகா அழைக்கவும், நிகிலனை மறந்து தங்கையிடம் ஓடினாள் அவள்!

விழா பற்றிய நினைவும், பேச்சும், அதைப் பாட்டியிடம் விவரிப்பதும், அன்றாட வேலைகளுமாக, வேண்டாத வேறு நினைவுகள் எதுவும் இல்லாமல் நிம்மதியாக இருந்த தரங்கிணிக்கு, விரைவிலேயே, தான் இருப்பதைக் காட்டிக் கொண்டான் நிகிலன்!



## 9

நல்ல திருமண மண்டபம் கிடைப்பதற்காகத் தீபிகாவின் திருமணம் இரண்டு மாதங்கள் தள்ளிப் போயிற்று!

அதற்காக, சுகந்தன் வருத்தப்பட்டானே தவிர, புதிது புதிதாக ஆடை அணிமணிகள் வாங்குவதும், அணிந்து பார்ப்பதும், பிடிக்கவில்லை என்று மாற்றுவதுமாகத் தீபிகா மிகுந்த உற்சாகமாகவே இருந்தாள்!

ஒரோர் சமயம், அபிப்பிராயம் சொல்வதற்காகத் தரங்கிணி அழைக்கப்படுவதும் உண்டு!



அவளுக்குமே, தங்கைக்கு அழகு செய்து பார்க்கும் இந்தப் பணி உற்சாகத்தை அளிக்க, அந்த வாரமே வேகமாக ஓடி மறைந்தது!

அடுத்த வாரம், திங்களன்று மதியத்துக்கு மேல், அவளது படங்களை விற்பனை செய்து கொடுக்கும் இரண்டு கண்காட்சி நிலையங்களுக்குச் சென்று, புதிய படங்களைக் கொடுத்துவிட்டு, விற்ற படங்களுக்கான பணத்தை வாங்கிக் கொண்டு தரங்கிணி திரும்பி வந்தபோது, முகத்தில் மலர்ச்சியோடு தங்கம்மா அவளுக்கு ஒரு செய்தி சொன்னாள்.

''அந்தப் பையன் போன் செய்தான், தரும்மா! அவனுடைய அல்லாம் நண்பருடைய மனைவிக்குப் பட்டுச் சேலைகள் வாங்க வேண்டுமாமே! தேர்ந்தெடுக்க உதவி செய்வதற்காக, உன்னை அழைத்துப் போக, நாளை மதியத்துக்கு மேல் வருகிறானாம்! நல்ல பிள்ளை! என்னமாக நினைவு வைத்து என் உடல்நிலை எல்லாம் விசாரித்தான் தெரியுமா?''

தரங்கிணிக்குக் கொதித்துக் கொண்டு வந்தது!

என்ன தைரியம் இருந்தால், அவள் விஷயத்தில் அவன் திட்டம் போடுவான்!

இத்தனைக்கும், அப்படிச் செய்யக் கூடாது என்று, திட்டவட்டமாக அவள் எச்சரித்திருக்கும் போது!

இன்று போல, அவளுக்கு எத்தனையோ வேலைகள் இருக்கலாம்! அவைகளைத் தூக்கிஎறிந்துவிட்டு,இவனது விருப்பம் போல ஆடுவாள் என்று எண்ணினானா? அல்லது, வெறும் பொழுதுபோக்காகப் பள்ளி வேலை

This memorandum contains advisory, consultative and deliberative material and is intended only for the person(s) named as recipient(s).